[illegible]

Vl. No. 12 22 [illegible] 1928

SL
[illegible], N28 K[illegible]
N28·1.12
188995

671 Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 1.] 1928ஆம் மார்ச்சுமீ 22உ [No 12.

MADRAS 8 MAY 1928

பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 221 | 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 231 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 223 | 6. | அரசியல் மலர்வன மல்லிகை (Ruskin) K. இராஜகோபாலன் | 233 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 225 | 7. | அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A. | 234 |
| 4. | தமிழ்ப் பாடம் | 227 | 8. | மதிப்புரை (பாகவ தசாரம்) | 237 |
| | | | 9. | வர்த்தமானம் | 238 |


## கலா நிலயம்.

### முயலாது இயலாது.

பாடசாலைகளும் கலைக்கழகங்களும் வாசக ஸ்தாபனங்களும் ஆரம்பக்கல்வி கட்டாயக்கல்விபோன்ற முறைகளும், இன்னும் இவையனைய சாதனங்கள் கணக்கில நாளுக்குநாள் வளர்ந்து வருகின்ற இக்காலத்தில், அவைகளால் சாத்தியமாகவேண்டிய கல்வி படிப்படியாய்க் குறைந்துகொண்டே வருகின்றது. எங்கும் யாவரும் இடைவிடாது 'கல்வி கல்வி' யென்று பேசுவர், கற்பவரைக் காண்பதரிது. கல்வியைப்பற்றிப் பேசுவாரனைவரும், கல்வி முறைகளை வகுத்துவைக்க முயல்வாரனைவரும், கல்வியின் குறைவால் நம் நாடு கீழ்மைபூண்டழிகின்றதெனச் சொல்வாரனைவரும் 'தமிழுலகிற்குப் பேருதவி செய்கின்றே'னென்று புத்தகங்கள் எழுதுவாரனைவரும் தாமே அக்கல்வியை உண்மையாகக் கற்கப் புகுவாராயின் கல்லாதார் பின்னொருவர் இந்நாட்டில் இலராவர். 'கல்வி' அதிகமாகவாகக் கற்றவரில்லாக் கொடுமையே போல், கற்பவர் குறையக் குறையப் புத்தகத்தொகுதியும் அதிகமதிகமாய் வெளியாகி வருகின்ற விபரீதத்தையும் கண்டு வருந்துகின்றோம்

இருபது வருடங்களுக்குமுன் இருந்தவர்களைக் காட்டிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை இந்நாள் அதிகமாயிருக்கலாம். ஆயின் என்! அதனால், கல்வி மிகுந்து விட்டது என்று நினைப்பது பிழை. பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்கள் தந்நாடிருந்தும் திரைகடலோடியும் தேடியுள்ளவர் வரிசை வருடா வருடம் வளர்ந்து கொண்டு வருவது உண்மையே. பெற்றிருக்கின்ற பட்டத்தைப் பார்த்து அவர்களைக் கற்றவர்கள் என்று மதிப்பதும் பிழை. கையிலே யொன்றை வைத்துப் படித்தவண்ணமா யிருப்பவர் தொகை இந்நாள் அதிகமாகத் தோன்றலாம். இதனால் கற்பவர் பலருளர் என்று கருதாவேண்டா. வர்த்தமானப் பத்திரிகைகளாக இல்லாதிருக்குமாயின் அவை, வருமான வரி உத்தியோகஸ்திரின் பார்வைக்கென்று ஆபத்தமாகும் குறிப்புப் பேரேடாயிருக்கலாம். பந்தயக் குதிரைகளின் குலமும் கோத்திரமுமாக இருக்கலாம். சட்டப் புத்தகமும் வழக்குக் கட்டுமாக இருக்கலாம். அல்லவெனில், எவ்விதச் சுவையும் அற்று நூலிற்கிருக்க வேண்டிய இலக்கணத்தில் ஒன்றேனு மில்லா தமைந்த 'நாவல்' களா யிருக்கலாம். ஆதலால், இத்தகைய அடையாளங்களைக் கொண்டு கல்வியேனும் கற்றவரேனும் கற்பவரேனும் வளர்ந்துவரக் காண்கின்றோமென்று எண்ணுதற்கோ சற்றேனும் இடமில்லை. இதுபோன்ற பரிதாபநிலை இவ்விந்திய நாட்டிற்கு மாத்திரம் வந்துற்றதென்று எண்ணவேண்டா. இக்காலத்திற்கே இது உரியது.

சில ஆண்டுகளுக்கு முன் இருந்த அளவு, இப்பொழுது உயர்ந்த ஆசிரியர்களேனும் ஆழ்ந்த மாணவர்களேனும் எங்கும் இலர். ஆசிரியர் மாணவ இருவகையார் தன்மையும் படிப்படியாய்த் தாழ்ந்து கொண்டு வருகின்றதன் காரணம் யாதென ஆராய

தல் இதுபோது நம் கருத்தன்று. வயிற்றைக் கடந்து வாழ்வது வரவரக் கஷ்டமாய்க் கொண்டு வருகின்றபடியாலும், இதனால் மனது மிகவும் சஞ்சலமடைந்து ஒன்றின்பால் ஊன்றிக் கருத இயலாது தவிப்பதாலும், பணத்திற்கு அளவு கடந்தவோர் மதிப்பு ஏற்பட்டிருப்பதாலும், பொது ஜனவாழ்க்கையில் தூயநோக்கங்களும் அரிய செயல்களும் தோன்றாமல், வாழ்நாளெல்லாம் அன்றன்று பாடு எவ்வாறு கழிப்பதெனும் துன்பச் சூழ்ச்சியில் தொலைகின்ற கொடுமையுள் கல்வி குறைவுற்ற காரணமும் அடங்கிவிடும்.

பொது வாழ்க்கையும் தனிவாழ்க்கையும் ஆழ்ந்த படிப்பில்லாது சிதைவுண்டு போகின்றதென்பதைப் பலர் அறிவர். அறிவரெனினும் அவ்வீழ்ச்சியைத் தடுப்பதற்குத் தக்க முறைகள் தேடுகின்றவர் இடையே வழிதப்பிப் பழைய இடத்திற்கே மீண்டும் வந்து திகைப்புற்று நிற்க நேர்கின்றது. ஏனெனில், ஆழ்ந்த படிப்பில்லாத குறையை நீக்கவேண்டுமென்று நினைப்போரும் தம்மளவிற்கூட அவ்வாழமும் வாய்மையும் வாய்ந்தனவற்றைக் கருத்தூன்றிக் கற்க முயலாமுன் கல்வி முறைகளைக் கையாளும் அதிகாரமும் செல்வாக்கும் எவ்வாறேனும் எய்தி விவகரிக்கின்ற காலத்தில், ஆழ்ந்த படிப்பென்று ஆரம்பித்து, வெறும் படிப்பாக நின்று, வரவரப் 'பிழையில்லாமல் எழுதவும் படிக்கவும் பயில்வது கல்வி' என்னும் தத்துவமே எஞ்சப், பிறகு 'இரண்டொரு பிழை இருந்தால்தான் என்ன' என வினவி, அதனின்று பிழை யன்றி வேறொன்றும் இல்லாப் படிப்பில் முதிர்வதற்குள்ளேயே, தொழிற்கல்வி யென்றும் வர்த்தகக்கல்வி யென்றும் ஆண்கல்வி யென்றும் பெண்கல்வி யென்றும் வகுத்துக் கடைசியில் எலக்ஷன் காலத்தில் அபேக்ஷகர் செய்யும் பிரசுரங்களைப் படிப்பதற்கும், ஓட்டுச் சீட்டில் குறிபோடுவதற்கும் கற்பதே கல்வி, என்ற படிகளால் இறங்கி யாவும் முடிவது இயற்கைதானே.

இந்தவிதப் பழக்கமுடையவர்கள் ஆன்றோர் ஆக்கிய நிரந்தரவாய்மைகளமைந்து திகழும் காவிய நூல்களுள் கருத்தைச் செலுத்தக் கூசுகின்றனர். அவைகளிற்றான் பெருமையும் உண்மையான பயனும் இருக்கின்றன வென்பதை அவர்கள் மறுப்பதில்லையெனினும் அவைகளைக் கற்பதற்கு வேண்டிய முயற்சிக்குத் தம்மனதை வயப்படுத்த நினைத்திலர். தமிழ் வரையிற் பேசுவோமானால், கம்பராமாயணமும் திருக்குறளும் இவைபோன்ற காவியங்கள் பலவும் கேட்டிருக்கின்றவர் அக்கேள்வியைப் பேரளவோடு கொண்டாடிக் கழிந்து போவானேன்! அறிஞரொருவர் நூலொன்றின் நயத்தை எடுத்துக்காட்ட, மிகுந்த ஆர்வத்தோடு அற்றைப்போது மகிழ்ந்தனராய்த் தாமும் அதைப் படிக்கவேண்டுமென்னும் விருப்பத்தால் அப்புத்தகத்தையும் உடனே போய் வாங்கிவிடுவர். ஆனால் புத்தகத்தைத் திறந்து பார்த்தால் ஒன்றும் புரிவதில்லை. பிறகு இரண்டொரு நாட்களில் புத்தகம் போனவிடம் யாருக்குத் தெரியாது. சிலநாட்களுக்குப்பின் அவரைச் சந்தித்து, "நீர் புத்தகம் வாங்கினீரோ, படித்தீரோ?" என்று கேட்டால், "எல்லார்க்கும் புரிகிறவிதமாக எழுதியிருந்தால் படிக்கலாம். தமிழாம் இது தமிழ்! நான் தமிழனல்லனோ! எனக்கு ஒரு எழுத்தும் விளங்காத புத்தகம் என்ன புத்தகம், போம்!" என்று தாம் படிக்காததற்கு ஆசிரியரிடத்தில்தான் குற்றமனைத்தும் இருப்பதாகக் காட்டுவார். பிறகு என்ன, கஷ்டமேயில்லாமல் ஓடுகிற ஓட்டத்தில் படிக்கக்கூடிய வர்த்தமானப் பத்திரிகையும் நாவல்களுமே! பழைய நண்பர்களைக் கைவிடமாட்டார்.

காவியங்களை எடுத்தவுடன் படிப்பதற்கு இயன்ற பயிற்சி எள்ளளவும் செய்யத்துணியாத தம் குறையைத்தான் சிறிது நினைத்தாலோ! சாதாரண அறிவுடைய தமிழன் ஒருவனுக்கு இரண்டொரு வருஷப்பயிற்சி யிருந்தால்கூடப் பண்டை நூல்களை உரைகளின் உதவியைக்கொண்டேனும் படிப்பதற்குப் போதிய வன்மை வந்தெய்துமே. இதற்குவேண்டிய முயற்சியில் தம் மனத்தைப் பொருந்தச் செய்தல் இன்றியமையாததெனும் எண்ணம்கூட எழாததற்கு அவர்கள், கல்லாதார் போதிக்கும் கலாசாலைகளுக்கே கடமைப்பட்டுளார். முன்னாள் கல்வி கற்ற முறையும் கற்பித்தோர் ஆழமும் இந்நாள் இல்லையென்று கூறவும்வேண்டுமோ.

இனி, முன்னாள் முறை யெது, இந்நாட்குரிய தெது என்று ஆராய்ச்சி செய்யத் தலைப்பட வேண்டா. கல்வியென்றால், பாடசாலைக்குப்போகின்ற வயதிற்குள் அடங்கிய பிள்ளைகளுக்குப் பாடமுறைகள் வகுத்து வைக்கின்ற கடமைதான் கல்வியென்னும் கருத்தொன்று புகுந்து நம்மைப் பாழாக்கி விடுகின்றது. பாடசாலை முடிந்த பின்னரே மெய்க் கல்வி ஆரம்பமாகின்றது என்னும் எண்ணம் எல்லாருக்கும் வரும் வரையில் எந்த முறையும் பயன்படாது. ஆளாகிவளர்ந்தவரும் அடியோடு புத்தகங்களைக்கட்டி யெறியாமலும், பயனிலாப் புல்லிய புத்தங்களைப் படிப்பதொழிந்து, செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீம்சொல் வவ்விய கவிஞர்தம் திவ்விய நூல்களைப்படியா தொரு நாள் கழியாமலும் காப்பாராயின், தாமும் தமதினைரும் முறையொன்று நாடாமலே மெய்வாழ்க்கையெய்துவர். புரியவில்லை யென்று அவ்வரிய நூல்களைக் கைவிதிர்க்கவேண்டா. வேண்டியது மூன்று நாள் முயற்சியே; மற்று, அற்ப விஷயங்களை அறிந்து படிப்பதைவிடப் பெரிய காவியங்களைத் தெரியாதுபடிப்பதே சிறந்ததென்றுஞ் சொல்லலாம். தெரிந்தேனும் தெரியாமலேனும் உயர்ந்தோரை ஆராதிப்பவர் உய்வர். எச்சிலிறைச்சியே எம்பெருமானுக்குரியதென ஒழுகினேனும் அன்பினால் பரகதியடைந்தான். 'தினசரி வர்த்தமானப் பத்திரிகையைப் பார்ப்பதற்கே நேரமில்லை' என்று சொல்லாதீர். (அதையும் 'பார்ப்பவரே' பலர்.) நல்லன படித்தபின் அவசியமாயின் அவைகளுக்கும் நேரமிருக்கும். 'வீட்டின் விசாரமும் வேலையின் தொல்லையும் நீங்கி மனதிற்கு அமைதி யேற்பட்டபின் ஆழ்ந்து சில நூற்களைக்கற்க ஆரம்பம் செய்வோம்' என்று எண்ணி எண்ணி முடிவு வரையில் மோசம் போகாதீர். கடலிற் குளிக்கச் சென்றவன் 'அலையடங்கட்டும்' என்று காத்திருப்பதை ஒக்குமிது. இன்றே ஓதுமின், அன்றன்று ஓதியதை அவ்வாறே பிறர்க்கு ஓதிவையுமின். பொது முறை எதுவுமின்றி யாவரும் ஓதியவராவர்.

சர்வகலாசாலை ஸ்தாபன நிமித்தமாய் நிகழ்கின்ற சில செய்திகள் எமக்கு இந்நினைவுகளை விளைத்தன.



## காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(209-வது பக்கத் தொடர்ச்சி)

### 10. வேதாந்த இதிகாஸங்கள்.

மாதவி தொடர மடத்தினின்றும் நடந்த கலாநாதனை வீதியில் கண்டுதெரிந்தவர் இருவர். தாமோதரன் அவ்வழியே சென்றது எவ்வேலையைக் கருதியதாயினும் இக்காட்சியைக் கண்டபின் நினைத்த கருமத்தை விடுத்துத் திரும்பி விட்டனன். திரும்பிப் போகும்போது அவன் தனஞ்சயனைச் சந்திக்கவும் நேர்ந்தது. தனஞ்சயன் தாமோதரனது காதுடன் இரண்டொரு வார்த்தை சொல்லி அகலத் தாமோதரன் காற்றினும் கடுகிப் புரசை விதியே போய்ச் சேர்ந்தான். அங்குக் காந்தார நாட்டுக் கட்டழகி எனக் காந்திமதி பெற்ற பட்டத்திற்குச் சகியாது பொறாமை தங்கிய சில மாதர்களைத் தேடிப் "பெண்ணே பார். வேசி யொருத்தியைக் கலாநாதன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுளன். இது இரகசியம். யாருக்கும் சொல்லாதே. பாவம் காந்திமதி கேட்டால் வருந்துவாள்," எனத் தனித்தனி யோதி, நேராகக் கருணாகரர் வீட்டிற்கும் சென்று "கருணாகரரே, கலாநாதன் ஒரு அழகியபெண்ணுடன் உலாவரக் கண்டேன்...அவனது தங்கையோ அவள்?...நல்லது, தாமதிக்க நேரமில்லை. தனஞ்சயன்கூடக் கண்டனனும். நோயாளிகள் பலர் காத்திருப்பர். போகிறேன்," என்றியம்பி நரபாலனது மாளிகையைச் சென்றடைந்தான்.

அம்மாளிகையில் இருண்டதோர் அறையில் சீற்றம் சூழ்ந்த மனத்தோடும் புண்வலிதாங்கா உடலோடும் அமளியிற் புரண்டு கிடந்தான் நரபாலன். தாமோதரன் அவனிட மணுகிப், "பிரபூ, இப்பொழுது எதற்காக வருந்துகின்றீர்......தேக வலியோ?...மனக் கொதிப்போ?" என்று வினவினன்.

"இரண்டுந் தானடா, விஷம் வைக்கும் பாதகா...... காலையிற்றான் இரணசிகிச்சை நீ செய்தாயிற்றே, சனியனே, மீண்டும் ஏனடா வந்தாய்," என்று வலிபொறுக்காது நரபாலன் வைத்தியனை யேசினன்.

"ஆயின், போகின்றேன். வேலை வேறு இல்லாமலோ இவ்விடம் வந்தேனென்று மதித்தீர். எனக்கிருக்கும் வேலையெல்லாம் விடாமல் பார்ப்பதென்றால் இருபது கைகள் போதாவே. இரண்டு கையாலும் வைத்தியம் செய்து இரண்டு கையாலும் பணம் அள்ளிக்கொண்டு வீடுபோய்ச் சேர்கின்றேன்......"

"ஏனடா துஷ்டா, என் இரத்தத்தைக் கொதிக்க வைக்கின்றாய். பிரபு நான்...அரண்மனையைச் சேர்ந்த நான்......கையொன்று குறைந்துகிடக்க, இழிகுலமாடே, உனக்கு அற்பக்கை இரண்டுண்டு என்று எத்தனைதரமடா எடுத்துச் சொல்லுவாய்!"

"நரபாலரே, புண் செய்தவனை விட்டுவிட்டுப் பரிகாரியை மருட்டுவதில் ஏதுபயன்........யான்கண்ட இரணவயித்தியத்தில் இது புதுமை!"

"ஐயோ! கையிழந்த பாவியே னாயினேனே!"

"இல்லை, அந்தவெட்டுக் கழுத்தில் விழாதது நீர் செய்த புண்ணியத்தின் பலன்."

"தலைபோயிருந்தலே தாமோதரா, தரம். என் வாழ்க்கையெல்லாம் அம்முரட்டுக் கம்மியன் பாழாக்கியபின் உயிர்சுமந்து ஐயோ யான் திரிவதோ! நான் ஏறாத குதிரை இருந்தென்ன. நான் போடாத போர் விளைந்தென்ன. எனதாசை மாதர்க்கு இனி நான் ஆளாவது எங்ஙனம்......!"

"போனவை போகத் தாங்கள் கண்கூடாகக் கண்டு களிக்கத் தக்கதும், எண்ண எண்ண மனத்துள் கிளர்ச்சி பெருக்குவதும் இன்னு மொன்றுளதே! நரபாலப்பிரபூ, அதைத்தான் மறந்ததேனோ!"

"பித்தா, என்னடாவது, எனக்குத் தெரியவில்லையே!"

"ஜீவகோடிக ளனைத்திற்கும் தவறாத வின்பத்தைத் தந்து நிற்கின்றது ஒன்றுளது", என்று சொல்லித் தாமோதரன் நரபாலனது காதருகிற் சென்று கர்ணமந்திரம் ஜபிப்பதுபோல், "பழிக்குப் பழி" என்று ஓதினான். இதைக்கேட்டதும் மார்பு படபடக்க நரபாலன் சிறிது நிமிர்ந்து, "அட, கூனுடைக் குரங்கே, இந்த உபதேசம் எந்த வேதத்தில் சொல்லியிருக்கின்றதோ சீ, சி போ!" என உரப்பினன்.

"நரபாலரே, சத்துருவும் மித்துருவும் சமமாகப் பார் என்பர் வேதாந்திகள். சாஸ்திர பிரவீத்தனான எனக்கே உலக விவகாரத்திற்கேற்ற வியாக்யானம் இவ் விதிக்குத் தெரியும். நான்கு வேதத்திற்கும் எட்டாத தன்மையில் யானுரைக்கும் பொருள் அந்நாராயணனையே ஒத்திருக்கின்றது. சத்துருவையும் மித்துருவையும் சமமாகப் பார்த்தால் வரும் முடிவு என்ன! சூக்ஷ்மமாய்ச் சொல்கின்றேன். விரிக்கில் பெருகும், 'மித்துருவைக் கொல்லலாம் சத்துருவை க்ஷமிக்காதே, என்பதுதான் அர்த்தம்".

"துஷ்டப் பிண்டமே. அட! குரோதம் துந்த கங்காளமே. மானம் இருப்பவனல்லனோ பழிதீர்க்கப் புகுபவன். ஏ பிணமே, உனக்கு மானமொன்று உண்டென்று நான் இதுவரையில் நம்பவில்லை!"

"கிடக்கட்டும். தளும்பாத குடமெல்லாம் நீரற்றதன்று. உம்போன்ற போர்வீரர் வாள்வன்மையால் பழிதீர்க்க ஆரவாரம் செய்கின்றார். சாந்த ஜீவிகளாகிய எம்மனோர் வஞ்சினம் ஒன்றும் வாயாலுரைக்காமல் ஒளிந்து கரந்துதான் கருமத்தை முடிக்கவேண்டி யிருக்கிறது. கையற்றவற்குக் கரவே கதி!"

"உண்மையைச் சொல், ஏ, விலைகொண்டு விஷம் விற்கும் வேசி மகனே, உண்மையைச் சொல். இத்துர்போதனை எனக்குச் செய்ய நீ புகுந்ததின் கருத்தென்ன? என்னைப் பழிவாங்கத் தூண்டுவதில் உனக்கு வரும் இலாபம் ஏது? மனித இயற்கை கற்ற வல்லவனடா நான். உண்மையைச் சொல். உனக்கிதில் இலாபம் இல்லையென்றால் நம்பமாட்டேன்...சொல்!"

"நம்பழி எவ்வழி அவ்வழி எனதும்!"

"வைத்திய, விளங்கச்சொல்."

"இக்கை குறைத்த கம்மியன் கலாநாதன் என்னைப் பலர்முன் பெரிதும் நிந்திக்கின்றனன். ஐய, அவன் வாள்பட்ட புண் நுமக் காறினும் அவனது நாப்பட்ட என்னெஞ்சத்து வடு வாறாது. நம்மிருவர் பகையும் ஒருங்கே முடிய அவனைக் கொல்லல் வேண்டும்."

"சே, செ! துருத்தி பிடித்த அத்தொழிலாளனா என் பகைக்கும் பாத்திரனாவான். இருப்பினும் கொட்டினது தேளானாலும் வெட்டித்தான் தொலைக்கவேண்டும். மேலும், இந்தப் பேய்தான் அவ்வுணர்ச்சியற்ற சித்திரப்பாவை காந்திமதியின் காதலிற்கும் வட்டமிட்டுக்

கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சரி, அவன் ●த்தான்.''

"பிரபூ, அவ்வளவ சுலபமன்று. தைரியத்திலும் தோள் வலியிலு மவன் இந்நாட்டில் நிகரற்றவன். அவனைக் கொல்லச் சென்றவன் மீண்டுவந்தால் மறுபிறப்பு. உருவத்தில் மாத்திரமல்ல, உரத்திலு மவன் வாலியே அனையவன்.''

"ஆயின் தாமோதரா, வாலியைக் கொல்ல அந்தச் சுத்தவீரன் இராமன் செய்ததையும் ஏன் மறந்தாய். மறைவிடம் ஒளிந்து......"

"ஓகோ பிரபூ, நரபாலரே, அடியேன் வேதாந்த ஞானத்திற்குத் தேவரீர் இதிஹாஸ ஞானத்திற் பிற்படவில்லை என்பது புலப்படுகின்றது. ஹ! ஹா!"

இந்தச் சமயத்தில் சேவகன் ஒருவன் நிருபம் ஒன்றை நரபாலனிடம் கொடுத்துவிட்டுப் போனான். அதை வாசித்தான் நரபாலன். பின் அவ்வோலையைச் சுருட்டித் தாமோதரனது முகத்தில் விட்டெறிந்தான். கோபத்தால் பிசையமுயன்ற அவனுக்குக் கையொன்றில்லாத துக்கம் மேலிட 'ஐயகோ' என்று வெய்துயிர்த்துத் "தாமோதரா, நீயும் படி கேட்கின்றேன். என் கண்ணை நம்புவது கஷ்டமாயிருக்கின்றது" என வைத்தியனும் அவ்வோலையினின்று பின்வருமாறு வாசித்தான்.

ஆசார்ய மடம்
இரதி பௌர்ணிமி.

"நரபால,

இனியுன்னை நண்ப என்றழைப்பதற்கில்லை. நம்மிருவர் தொடர்பும் இன்று உன்வலக்கையுடன் அற்றது. அக்கையேபோல் நின்தலையும் துணியாவண்ணம் எந்தை அருளினார். நானுனக்கு இதுகாறும் அள்ளிக்கொடுத்த பொருளெல்லாம் உனதே. மீண்டும் என்வழி நீ வருவாயாயின் இரண்டையுமிழப்பாய்.

சித்ராங்கன்''

இது படித்து முடிந்ததும் தாமோதரன் சிரிக்கவே, நரபாலன் வெகுண்டு, "கொடியோய், எனது துன்பம் உனக்கு நகை விளைக்கின்றதுபோலும். உன் பேழ்வாயைக் கிழித்தெறிகின்றேன் பார்!" என்றழலுங்கால் தாமோதரன், "ஐய, மீண்டும் என்னை வெகுளலால் ஏது பயன். அரசகுமாரனொருவன் உம்மை வைதால் அதற்கு வேறோர் வைத்தியனது வாயைக் கிழித்துவிட நமது பிரபுமுறை கூறியதுண்டோ!" என்றெடுத்துக்காட்ட, நரபாலன், "வைத்தியா, கேள். 'பழிக்குப்பழி' எனும் பிரம்மோபதேசம் நீ யெனக்குச் செய்தனை. அப்பழிக்கு நீ அடுத்துக்காட்டும் ஆளோ ஒரு அவலக் கம்மியன்...... நரியின் நுழையில் காகத்தின் வாலும் கர்த்தபத்தோலும் தானே காணலாம்......அட, எனக்கேற்ற இரையொன்று அகப்பட்டுளது இத்தருணம்.'' என உரைத்தனன்.

"மன்னவாது தூண்டலால் இளவரசர் இந்நிருபம் வரைந்திருக்கவேண்டும். உண்மையில் அவர் நும்மைக் கைவிடார்."

"கிழத்தந்தை சொற்கேட்டதின் பயனை அச்சிறுன், ஆயின், அநுபவிக்க வேண்டியதுதான். எவன் பொருட்டு நான் கையிழந்து உழல்கின்றேனோ அவனேயா என்னைக் காலால் உதைத்துத் தள்ளுவது! வைத்தியா, என் சினம் சித்ராங்கனது சிரஸைத் தேடுகின்றது. கம்மியனைக் கழிக்க நானுனக்கு உதவியாகின்றேன். மற்றதற்கு நீ யெனக்கு யாது செய்வாய்!''

"பிரபு, இவ்வடிமை தேவரீர் விதித்தது செய்யும். ஐய, மற்றொன்று. சித்ராங்கன் இலனையின் விச்வகேசரிக்குப் பின்......என்! இவ்வரசக் கிழமும் நம்பழிக்கு இப்பொழுது ஆளாகிவிட்டது......இத்தேசத் தரசன் யார்!"

"யார்?"

"பலோராஜா பிருத்வீபதி!"

"ஓகோ!"

"ஆம்!"

"சரி"

"நாயினேன் இன்னதற்குச் செய்யும் ஊழியத்தை அன்னபோது மறக்கப்படாது"......

"நின் பேரவா பின்னிட யானளிப்பன்......அடெ, நீயோ என்னை இடம்பார்த்து விற்றுவிட்டால்....."

"என்னையும் தானே கூட விற்றுக் கொண்டவனாகும். சங்கை வேண்டாம். ஸத்தியம்!

"ஆயின் கையறைந்து தா!" என்று நரபாலன் நீட்டிய தன்கை முண்டமாயிருக்கக்கண்டு, "ஐயோ, என்ன செய்வேன். வலக்கை யிழந்துளேன் என்பதைப் பாவியேன் மறந்தேனே. தெய்வமே, நரபாலன் வாக்கையும் வழக்கையும் நிலைநாட்டும் வலக்கை போயிற்றே!" எனப் பெரிதும் பேதுற்றனன்.

"பிரபு, வருந்துதல் ஒழிமின். கருமமே கண்ணாயிருத்தல் வேண்டும். கம்மியன் மாண்டான் எனக்கேட்கக் கையொடிந்த குறை மறையும்."

"அஃது எங்ஙனம் ஆவது?''

"அதையும், ஐய, தீர்மானித்துளேன். பகலிலோ அவன் தொழிலிடம் நெருங்குவதற்கில்லை. பீமனும்சூரனுமாய் ஐந்தாறு ஆட்கள் அங்கு வேலை செய்கின்றனர். ஆனால் இன்றிரவு அவன் காந்திமதியின் வீட்டிற்குப் போவது அல்லது அங்கிருந்து வருவதோ திண்ணம். தனியாயுந் தானிருப்பான். அதுபோது மறைவிடமிருந்து பாய்ந்து........"

"இருக்கட்டும். இத்துணையுக்தி பேசுகின்றாயே! ஏ, பிணமே, மோதிரத்தின் முத்திரையிலிருந்து கையிழந்தவன் நானே யென நீ அறிந்திருப்பாயே. மற்று என் இந்நகரப்பதர்கள் சந்திரசேகரரிடம் சென்று முறையிடாமல் நீ தடுக்கவில்லை."

"ஐய, என்னாலான வளவு முயன்றேன். அதற்குப் பதிலாய்த்தான் அந்த இராக்ஷஸக் கம்மியன் என்னை, 'க்ஷயாபஸ்மார குஷ்டப்பிண்டமே' என்று வைதான்."

"தாமோதரா, நமக்குள் பேசிக்கொள்வோம். கம்மியன் சூக்ஷ்ம புத்தியுடையவன் என்றே காண்கின்றது. அவனுனக்குக் கொடுத்த அடைமொழி எதுவும் பொய்யாகாது......"

"ஐய, இனி நீவிரென்னை இன்னவாறு இளிவரவுரைப்பது அழகாமோ......நம்மிருவருக்கும் கூட்டுறவு ஏற்பட்ட பின்......"

"நல்லது, மகோதரனைக் கூப்பிடு, வேலையைப் பார்ப்போம்."

தாமோதரனும் அவ்வறைக்கு வெளிவந்து, 'மகோதரா', என்று அழைக்க அப் பேர் கொண்டவனும் வந்தான். எட்டடி உயரம். இருளையே இருட்டும் கருமேனியன். உருண்டு சிவந்த கண்ணினின்று எழும் தீக்கொழுந்தெனச் சுருண்டு பரந்த பங்கியன். ஒவ்வொரு காலும் கையும் நாலாள் கனத்திற்குக் குறையாது. காலனார் விடும் தூதரைக் கண்டிலேம் என்பவர் இவனைக் கண்டிலாதாரே. ஆயவன் உள்வர, "மகோதரா, உன் கைத்தொழிற்குக் காத்துளான் ஒருவன்", என்றான் நரபாலன். மகோதரனும் பேயெனச் சிரித்துத் தாமோதரன் இருந்த பக்கம் திரும்பி, 'இவன்தானா' என்று கேட்பான்போல் தலை யசைத்தான். இந்தச் சந்தேகத்திற்குப் பதில் சாடை கிடைப்பதற்குள் கைத்தொழிலைக் காட்டியு மிருப்பான். ஆனால் வைத்தியன் விரைவுடன் விலகி, "அப்பாடா, நானில்லையடா, எசமானர் சொல்வதை முடியக் கேட்டுக்கொள்ளடா, அப்பா குடிகேடா?" என, நரபாலனும், "மகோதரா, வைத்தியரல்ல......வைத்தியரல்ல.........இவர் உனக்கு ஒரு ஆளைக்காட்டுவார். அவனைக் கொன்றுவிடு. அடெ, அவசரப்படாதே. கம்மியன் கலாநாதனடா! கம்மியன் கலாநாதன்!" என்றனன்.

மகோதரனோ, தலையைத் தடவிக்கொண்டு, "கடினமான வேலையாயிற்றே யிது. முதலடி தவறினால் மோசம் வந்துவிடுமே", எனக் கலங்கினான்.

"இருவரை யுனக்கு உதவி அழைத்துச் செல்"

"வேண்டாம், வேண்டாம். கெடுத்துவிடும் அதுகள் காரியத்தை. எத்தையாவது இரட்டிக்க வேண்டுமானால் என் கூலியைப் பெருக்குங்கள், போதும்".

"சரி, ஆகட்டும். நீபோய் வாயிலிலிரு. இவர் போகும்போது கூடப்போய்ச் சொல்வதைச் செய்," என்று நரபாலன் சொல்லியனுப்ப நடந்த தரை நெளியத் தான் மிதித்து மகோதரன் அகன்றான். அவனகன்றதும், "கம்மியன் வாள்திறத்தை நீர் கைக்கூடாய் உணர்ந்திருந்தும் அவனைக்கொல்ல இந்த ஒரு பூதந்தான் போதுமோ?" என்று தாமோதரன் வினவ, நரபாலன், "சந்தேகம் எதற்கு! நீ வைக்கும் விஷம்போலவே மகோதரன் கைக்குறியும் தவறாது. சீக்கிரம்போய் வேலையை முடித்துக்கொள். நாளைவா," என்றனன். தாமோதரனும் எழுந்து பூனைபோல் நடந்து அறைக்கு வெளியாயினான்.

T. N. சேஷாசலம்.



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 211)

### தனிப் பாடல்கள்

**பலபட்டடைச் சோக்கநாதர்:—** காளமேகனைப் போலவே பலபட்டடைச் சொக்கநாதப் புலவரும் பலவாறு புனைவிலிபுகழ்ச்சி யணிபடப் பாடி இருக்கின்றனர். இறைவன் குண்டைக்கு ஒருத்தன் (குண்டை-மாடு; அதனையுடைய ஒப்பற்றவன்); கூத்தாடும் பித்தன் (பித்தன் - மெய்யுணர் வுடையோன்.) குண்டுணி (சங்கிலியிடம் சென்று சுந்தரன் தன்னை மகிழமரத்திலிருக்குமாறு வேண்டிக் கொண்டதைக் கோள் சொல்லியவன்) கண்டக் கறுப்பன் (நஞ்சம் உண்டு நெஞ்சு கறுத்தவன்.) பிள்ளையைத் தின்னி (சிறுத் தொண்டனது பிள்ளையின் கறியைத் தின்ன வந்தவன்.) மண்டைக் காத்தன் (எல்லாம் அழியும் பேரூழியில் மலரவனையும் அழித்து அவனது மண்டையோட்டைக் கையில் ஏந்துபவன்,) கண்ணப்பன் எச்சிலை வாரி உண்ட பண்டைப் பறையன் (பறை - அம்மை; பண்டைப் பறையன்; பழமையாக அம்மையோடே இருப்பவன்) என இரட்டுற மொழிந்து வைவதுபோல வாழ்த்துகின்றார்.

குண்டைக் கொருத்தனைக் கூத்தாடும்
  பித்தனைக் குண்டுணியைக்
கண்டக் கறுப்பனைப் பிள்ளையைத்
  தின்னியைக் காண அயன்
மண்டைக் காத்தனைக் கண்ணப்பன்
  எச்சிலை வாரியுண்ட
பண்டைப் பறையனை யோதேவன்
  என்று பகருவதே,

என்று வசைமொழிகளை நிறைத்துவைத்துப் பாடியமை காண்க.

முன்னர்க் காளமேகம் தாய்தந்தை இல்லாமையைப் பற்றிப் பாடியதுபோலவே இவரும் பாடுகின்றார். ஏனென்று கேட்கத் தாயோ தமரோ உனக்கு இல்லாமற் போனதால் அல்லவா உன்னைத் தொடவும் தகாத வேடன் உன் அருகில் வந்தான்; உன் தலைமேல் செருப்பாலும் அடித்தான். எச்சிலை நின்தலையில் துப்பினான்; எச்சிற் சோற்றினை வலியவும் ஊட்டினான். அவனைக்கண்டு அஞ்சிக் கண்ணீர் ததும்பி நீயும் நின்றாய்" என்ற பொருள்பட

சேராத வேடன் செருப்பால்
  உதைக்கவுந் தீண்டவுந்தன்
நீர்வாய் உமிழவும் உச்சிட்டம்
  போடவும் நீண்டசிலைத்
தாரால் இடிக்கவும் கண்ணீர்
  ததும்பவும் தாய்தமர்கள்
ஆராகிலும் இல்லை யோதிருக்
  காளத்தி அப்பனுக்கே.

என்ற செய்யுளைப்பாடி இரங்குகின்றார்.

திருமறைக்காடு சென்று சிவபெருமானைத் தொழுது ஒன்று பாடுகின்றார். சிவனுக்குள்ளது அரைக்கண்தான் என ஏசுகின்றார். "முன்னோர்கள் முக்கண்ணன் என்று மொழிவார்கள். ஆனால் உடலிற் பாதி பகிர்ந்து கொண்ட அம்மை அம்முக்கண்ணில் செம்பாதியாக ஒன்றரைக்-கண்ணைத் தனக்கெனக் கொண்டாள். நின்றது ஒன்றரைக் கண்ணே அவ்வொன்றரையிலும், கண்ணப்பன் அப்பியது ஒன்று, ஆகவே தனது கண்ணாய் நின்றது அரைக்கண்ணே" என்கின்றார்.

முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவார்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே—மிக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றான்வேடன் கண்
றமையும்இத னாலென் றறி. [ணொன்

என்று கூட்டியும் கழித்தும் வகுத்தும் புள்ளிபோட்டுக் கணக்கெடுத்துக் கொடுக்கின்றார்.

இவரே மதுரை சென்றபொழுது பாண்டியன் பிரம்பாலடித்த கதையை நினைத்துக்கொண்டு பாடுகின்றார். "என்னே! இப்பாண்டியனுக்கு நெஞ்சில் எள்ளளவும் ஈரம் இல்லையா? அந்தோ! பாதியுடல் பச்சைப் பசும்பெண்ணென்றும் பாராது அடித்தானே - இவ்வடிபட்ட சொக்கனோ சொன்ன பேச்சுக் கேட்கும் ஆளாயிற்றே. அவனை அடிக்கவும் வேண்டுமா? செய்யென்றால் செய்யானோ? ஏதும் கெட்ட வேடன் எதிர்நின்று எச்சிலிறைச்சியை உண்ணென்றதும், குறுக்கொன்றும் பேசாது சொன்னபடி செய்தானே, இத்தகையவனை எவ்வாறு பிரம்பாலடித்தானோ" என்று இரங்குகின்றார்.

மண்ணென்ற மண்டலம் எல்லாம்
  புரக்கும் வழுதிசற்றும்

தண்ணென்ற நெஞ்சம் தரித்தில
னேதனு வேடனெச்சில்
உண்ணென்ற போதுண்ட வர்சொக்கர்
பாதி உடலம்பச்சைப்
பெண்ணென் றறிந்தும் அடித்தானெவ்
வாறு பிரம்புகொண்டே.

எனப் பாண்டியனை இழித்துக்கூறி இறைவனுக்கு இரங்கிப் பாடுவதுபோலப் பாடி "அடியார்க்கெளியன்" என்பதைக் குறித்துப் போகின்றார்.

**சொக்கநாதப் புலவர்:**—சொக்கநாதப் புலவர் என்று பெயர்படைத்த மற்றொருவர் தில்லை வாணரை நோக்கிப்பாடுகின்றார். "என்னே இது! கல்லாலும்வில்லாலும், பிரம்பாலும்-அம்மட்டோ, செருப்பாலுங்கூட,' அடி அடி என்றடித்தவர்களை நல்லவர்கள் என்று நம்பி அந் நால்வருக்கும் நன்மையே செய்தீர். அந்தோ உன்னை இகழ்ந்தானா? உன்னை அடித்தானா? ஒன்றும் செய்யவில்லையே. மெல்லிய பூக்கொண்டு மெத்தையிடுவது போல விளையாடி எறிந்த மன்மதனை ஏனோ எரித்துவிட்டீர்," என்று இகழ்வதுபோலப் புகழ்ந்து உள்ளநிலை உறுதியுடையது என்பதையும் புறத்தொழில் எல்லாம் பொய்த்தொழில் என்பதையும் விளக்கினார்.

"செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம்
பலவாண தேவா உம்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணியருள்
ஈந்ததென்ன இகழ்ச்சி ஒன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லு வீரே"

என்று நன்மை தீமை தெரியாது வாழும் பித்தரெனப் பெருமானை ஏசுகின்றார். மனம்போல வாழ்வு என்பதை வற்புறுத்துகின்றார்.

மற்றொரு காலத்தில் மற்றொரு வகையாகப் பாடுகின்றார். "கல்லால் அடித்த சாக்கியனுக்கும் வீடு அகப்பட்டது, வேடிக்கையாக அடித்தாலும் குற்றமில்லை. சண்டைக்கு வந்து மும்முரமாக மலைந்து உம்மை ஓங்கி வில்லாலடித்தவனுக்கு வில்லொன்று போதாதென்று அம்புங் கைகொடுத்தீர். செருப்பாலுதைத்த திண்ணனும் சிவனானான். ஐயோ கண்ணீரும் கம்பலையுமாக, அழுது புரண்டலமந்து நீயே உய்வழி எனப் புகழ்கின்றோமே! (தியாகையா) வள்ளல் எனப் பேரும் கொண்டீர். எங்களுக்கு ஒன்றும் இல்லையா? இது அறமுறையா" எனக் கையேந்தி இரத்தற்குத் தொடங்குகின்றார்.

நல்லாளை இடமருவும் தியாகையா
உம்மிடத்தில் நியாயம் காணோம்
கல்லாலே எறித்தோர்க்கும் செருப்படியால்
உதைத்தோர்க்கும் கடிந்து போரில்
வில்லாலே அடித்தோர்க்கும் கொடுத்தீரே
அல்லாமல் விழிநீர் சோர
எல்லாம்உம் செயலென்றே இருப்போருக்
கியாதொன்றும் ஈகி லீரே.

என்று கொடுமைபாடிக் கூழுக்குத் தாளம்போடுகின்றார்.

திருக்கழுக்குன்றத்திற்குச் சென்றிருந்தபோது பன்னிரண்டாண்டிற் கொருமுறை இடிவிழுந்து திருமஞ்சனமாவதைக் கண்டு ஓர் பாட்டுப் பாடினார். "முதலிலேயே பாண்டியன்பால் பிரம்படிபட்டாய், பின்னும் சாக்கியன் வந்து கல்லெறிந்து போயினான். அத்தனைக்கும் ஆளானபின்னும் அவை போதா என்று ஒருவேடனது செருப்பாலும் உதைபட்டாய். அந்தோ நீவந்தவழி இப்படியும் இருக்கவேண்டுமா. தலையும் சடைபிடித்துப் போயிற்று, மலையிலோடிப் புகுந்தீர். முதற்கோணல் முற்றுங்கோணலாய்முடிந்ததே. இங்கும் விட்டபாடில்லை இப்போது இன்னும் இடியும்விழ—ஐயோ—நீ இதையும் பொறுத்திருக்க வேண்டுமோ—நீயா ஒரு கடவுள்" என இரங்கி இகழ்கின்றார். அன்பின் அருமையைப் புகழ்கின்றார்.

அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர்
அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர்
இப்படியும் படுவார் உண்டோ
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணல் முற்றக் கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவா
உமைத்தெய்வம் என்ன லாமே.

என இளிவரற் சுவைக் குறிப்புத்தோன்றப் பாடுகின்றார்.

**நமச்சிவாயப் புலவர்:**—நமச்சிவாயப் புலவர் என்பவர் இத்திருக்குன்றினுக்கே சென்றபோது கழுகுகள் நாளும் வந்துபோவதைக் குறித்து ஓர்பாடல்பாடி உள்ளனர்.

"மான் பிடித்தீர் முயன்மிதித்தீர்
எவரும் காண
மன்றுதனில் ஆடெடுத்தீர்
மதத்து வந்த
ஊன் பெருத்த யானையைக்கொன்
றுரித்தீர் இப்பால்
உரப்பான தலைக் கறிக்கும்
உவந்தீர் ஐயா
மீன் பொதிந்த விழி மடவாட்
கொருபங் கீந்தீர்
மேலான வேடனெச்சில்
மிகவே கொண்டீர்
கான்பொதிந்த வேதகிரி
நாதா உம்மைக்
கழுக்கள் வந்து சுற்றுவதும்
காணத் தானே"

என்பதே அப்பாடல். "கழுகுகள் இங்கு வருவது உம்மைக் காணவல்ல. அவைகளுக்கு விருப்பமான புலாலுணவு உம்மிடம் நிறைய இருத்தலினாலே உம்மை வட்டமிடுகின்றன. மானைக் கையில் பிடித்து வைத்திருக்கின்றீர் - முயலை (முயலகனை) மிதித்துக்கொண்டிருக்கின்றீர். ஆடு (தில்லையில் கூத்து) எடுத்தீர். யானையை உரித்தீர். சீராளன் தலைக்கறி (அல்லது மலரவன் தலையோடு) வேண்டும் என்றீர். கண்ணப்பன் மென்று தந்த பன்றிக்கறியும் மான்கறியும் - இன்னும் என்ன என்ன கறியோ - அவையும் - நிறையத் தின்றீர். பாதியுடல் பெண்ணுக்குக் கொடுத்தீர். அவள் கண்களிலும் மீன்கள் பொதிந்துள்ளன. புலாலை உண்டு புலாலைப் போர்த்து புலாவின் இடையே பொருந்தியுள்ள புலையரென அறிந்து உம்மைப் பார்த்துக் கொண்டே திரிகின்றன கழுகுகள்" எனத் தற்குறிப்பேற்றமாகப் புதுமை நயம் தோன்றக் கூறுகின்றார்.

**இராமச்சந்திர கவிராயர்:**-அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். தனிப்பாடல்கள் எவ்வளவு இனிப்பதாக இருந்தாலும் அவற்றையே சொல்லிக்கொண்டு பொழுதுபோக்க இயலாது. ஆகவே மற்றொருபாட்டினை எடுத்துக்கூறித் தனிப்பாட்டாராய்ச்சியை முடித்துக் கொள்வோம். இராமச் சந்திரக் கவிராயர் என்ற பாவலர் ஒருவர், வேறு ஒரு புலவன் கதையை ஓர் பாட்டாகப் பாடுகின்றார். ஒரு புலவன் உலகத்தினரைப் பாடினால் பொருள்வரும் என எண்ணினான். அவர்கள் வீட்டிற்குச் செல்வதில் செருப்புந் தேய்ந்து காலும் தேயத்தேய நடையாக நடந்து காலெல்லாம் புண்ணாகி நின்றான். அவர் வாயிற்படியில் பலமுறையும் போகும் போதும் வரும் போதும் முட்டிக் கொண்டு முட்டிக் கொண்டு தலை எல்லாம் புண்ணாய்ப் போனது. அவர்கள் வைத வசைச் சொற்களை எண்ணி எண்ணி மனமும் புண்ணானான். இனி, இன்பம் தருவோன் (சங்கரன்) எனப் பெயர் படைத்த இறைவனிடத்தில் போனாலாவது ஏதேனும் கிடைக்கும் என்று அவரிடம் சென்று தன் தலைப் புண்ணையும் கால் புண்ணையும் நெஞ்சிற் புண்ணையும் காட்டி நின்றான். இறைவனோ அவனுக்குமேல் தாம் புண்பட்டிருப்பதாகக் கூறிப் பிரம்படி பட்ட புண்ணையும், வில்லடிபட்ட புண்ணையும் கண்ணப்பன் தன் வலிவு கொண்ட அளவு உதைத்ததால் வந்த புண்ணையும் காட்டிக் கையை விரித்து விட்டாராம். இவ்வளவே அந்தக் கதை.



வஞ்சர்பால் நடந்த லைந்த
காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட
தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு
நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால்
சேர்ந்தேன் "அப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின்
புண்ணும் வேடன்
கோடுங்காலால் உதைத்தபுண்ணும்
கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால்
அடித்த புண்ணும்
பார்" என்றே காட்டி நின்றான்
பரமன் தானே.

எனப் பாவலர்கள் படும்பாட்டை நயம்படப் பாடிப் போகையில் கண்ணப்பர் கதையையும் இடையில் இழுத்துவிட்டுப் பாடிப்போகிறார்.

**வேற்றுமை நயம்:**—பொருளை விளக்கிச் சென்றவர்களும் அணிகள்வரப் பாடியவர்களும் சுவைக்குறிப்புத் தோன்றச் செய்யுள் இயற்றியவர்களுமாகப் பலரும் பலவகையாகக் கண்ணப்பர் கதையினைக் கையாண்டார்கள். தத்தமக்கு வேண்டியவாறு கதையைப் பயன்படுத்திக் கொண்டனர். உவகைச் சுவை ஓங்கித் தோன்றவும் அவலச் சுவையில் ஆழ்ந்துபோகவும், இளிவரற் சுவையில் இழிந்து எழவும், பெருமிதச் சுவை பெருகி ஒளிரவும், அச்சச் சுவை ஆட்டிப் படைக்கவும் நகைச் சுவை நகை விளைக்கவும் வெகுளிச்சுவை மிகுதியாய்ப் பொங்கவும், மருட்கைச் சுவை மனதைக் கவரவும், பலவாறாக ஒரு கதையினையே பாடுவதனை ஆராயஆராய மருட்கைச் சுவையே விளைகின்றது. இனி ஒரு சுவையே வரப் பலர் பாடும்போதும் சுவைப்பொருளை மாற்றிப் பலவகையாக மாற்றித் தற்குறிப்பேற்றமாகப் பலவகையாகப் பாடுவதும் பெரும் வியப்பே. இவ்வாறெழுந்த பாக்களுடன் சேக்கிழார் கூறிவரும் கதையினையும் உடன் வைத்து ஒத்து நோக்குக. **T. P. மீனாக்ஷிசுந்தரன்.**

# தமிழ்ப் பாடம் 12.

## நள வெண்பா

(206-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்க
ளுற்ற தறியா வுளநடுங்கிப்—பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி. 41.

**பதப்பிரிவு:**—கொற்றவன்தன் தேவிக்கு கோமகள் தன்தோழியர்கள் உற்றது அறியா உளம் நடுங்கி பொன் தொடிக்கு வேறுபாடு உண்டு என்றார் வேந்தனுக்கு மற்று அதனை கூறினாள் பெற்ற கொடி.

பதவுரை.

கோமகள்தன் - அரசகுமாரியினுடைய
தோழியர்கள் - தோழிமார்கள்
உற்றது - நிகழ்ந்தது
அறியா - அறியாமல்
உளம் - மனம்
நடுங்கி - நடுங்கி,
கொற்றவன்தன் - அரசனுடைய
தேவிக்கு - மனைவிக்கு,
"பொன்தொடிக்கு - பொன்னாற்செய்த வளையல்களை யணிந்த தமயந்திக்கு
வேறுபாடு - (ஏதோ) மாறுபாடு
உண்டு - உண்டாயிருக்கின்றது"
என்றார் - என்று கூறினார்.
மற்று - பிறகு
பெற்ற - தமயந்தியைப் பெற்ற
கொடி - கொடிபோன்ற தாயும்
வேந்தனுக்கு - அரசனுக்கு
அதனை - அந்தச் செய்தியை
கூறினாள் - சொன்னாள்.

**கருத்து:**—தமயந்தியின் நிலையைக்கண்ட தோழியர் பெரிதும்பயமெய்தி அவள்தாயினிடம் சென்று, "தமயந்திக்கு ஏதோ வேறுபாடு உண்டாயிருக்கின்றது" என்று கூறினார்கள். அவளும் வந்துபார்த்துவிட்டுத் தன் நாயகனிடம் சென்று செப்பினாள்.

**விரிவுரை:**—அன்னத்தினுடன் தமயந்தி தனியிடம் சேர்ந்துவிட்டாளாதலால் தோழியர்களுக்கு அங்கு நடந்த செய்தியொன்றுந் தெரியாது எனவே மீண்டும் சந்தித்தபோது காதலால் உள்ளழிந்து முகம் வெளுத்துப்போன தமயந்தியின் வேறுபாட்டைக் கண்ட தோழியர், இதற்குக் காரணம் காதல்நோய் என்பது உணராமல் நடுநடுங்கி அரசிக்குப்போய்ச் சொல்லினர். உற்றது அறியா உளம் நடுங்கி, என்ற வாக்கியத்தில் அறியா என்பது வினையெச்சம். இந்த உருவம் உடைய வினையெச்சத்திற்கு உடன்பாடு (positive), எதிர்மறை (negative) இரண்டு பொருள்களும் உண்டு. [இதனை விரிவாக, 51-வது பக்கத்திலுள்ள குறிப்பிலும், 166-வது பக்கத்திலுள்ள குறிப்பிலும் காண்க]. ஆதலால் இங்கு அறிந்து நடுங்கினார்கள் என்றும் கொள்ளலாம்; அறியாமல் நடுங்கினார்கள், என்றுங்கொள்ளலாம். ஆனால் முன்னும் பின்னும் உத்தேசித்தால், அறியாமல் நடுங்கினதாகக் கொள்வதுதான் சிறந்தது.

தமயந்தியினது அன்னையின் பெயர் சாருவாசினி. அவள் தமயந்தியை வந்து பார்த்துப் பிறகு அரசனிடம் அவளது நிலையைச்சொன்னாள். நோயின் குறிகளென்ன வென்று கேட்டிருப்பான்; 'முகம் விளர்த்து மெய்பதற வாய்க்கு வந்ததைப் பிதற்றி வெறித்த பார்வையளாய்க் கிடக்கின்றாள் நம் மகள்; யாது செய்வோம்' என்று அரசியும் கூறியிருப்பது இயற்கையே. யாவும் கேட்ட அரசன், அனுபவ முதிர்ந்தவனாதலால், இது காதல் நோயாகத்தான் இருத்தல்வேண்டும் என்று ஊகித்திருப்பான். ஏனெனில் அடுத்த செய்யுளில் இவன் தன் மனை விட்டுக் கன்னிமாடத்திற்குப் புறப்படுகின்ற பவனிவைபவத்தைப் பார்த்தால் நோயுற்ற மகளைக்காண விரைந்து செல்கின்ற ஒரு தந்தையின் செய்தியாய்த் தோன்றவில்லை.

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்
மருங்குலவ வார்முரச மார்ப்ப—நெருங்கு [கால்
புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை. 42.

பதப்பிரிவு:—கரும் குழலார் செம் கையினால் வெண் கவரி பை கால் மருங்கு உலவ வார் முரசம் ஆர்ப்ப நெருங்கு புரி வளை நின்று ஏங்க போய் புக்கான் பெற்ற வரி வளை கை நல்லாள் மனை.

அன்வயம்:—கரும் குழலார் செம்கையினால் (வீசும்) வெண்கவரிப் பைங்கால் மருங்கு உலவ, வார் முரசம் ஆர்ப்ப, நெருங்கு புரிவளை நின்று ஏங்க, போய் (தான்) பெற்ற வரிவளைக்கை நல்லாள் மனை (வீமராஜன்) புக்கான்.

பதவுரை.

கரும் - கரிய
குழலார் - கூந்தலையுடைய மாதர் (தம்)
செம் - சிவந்த
கையினால் - கைகளால் (வீசும்)
வெண் - வெண்மையாகிய
கவரி - சாமரையினது
பை - பசுமையாகிய
கால் - காற்று
மருங்கு - பக்கத்திலே
உலவ - உலவவும்,
வார் - வார்கட்டிய
முரசம் - பேரிகைகள்
ஆர்ப்ப - சப்திக்கவும்,
நெருங்கு - அடர்ந்த
புரி - முறுக்கு வாய்ந்த
வளை - சங்கவாத்தியங்கள்
நின்று - இடைவிடாமல்
ஏங்க - ஒலிக்கவும்
போய் - புறப்பட்டு,
பெற்ற - (தான்) பெற்ற
வரி - கோடுகளமைந்த
வளை - வளையல்களை யணிந்த
கை - கைகளையுடைய
நல்லாள் - பெண்ணாகிய தமயந்தியின்
மனை - மனையினுள்
புக்கான் - புகுந்தான்.

விளக்கம்:—புக்கான் - புகுந்தான் (பயனிலை). [யார் புகுந்தான்? வீமராஜன், (தோன்றா எழுவாய்)] எங்குப் புக்கான்? மனை. யார் மனை புக்கான்? நல்லாள் மனை. எப்படிப்பட்ட நல்லாள் அவள்? கை நல்லாள் - கைகளையுடைய பெண். எதையணிந்த கைகளையுடைய நல்லாள்? வளைக் கை நல்லாள் - வளையல்களை அணிந்த கைகளையுடைய பெண். எப்படிப்பட்ட வளையல்களை யணிந்த கைகளையுடைய பெண்? வரி வளை - கோடுகள் அமைந்த வளையல்கள். அந்த வரி வளைக் கை நல்லாள் யார்? பெற்ற நல்லாள் - அவன்பெற்ற பெண். என்ன செய்து நல்லாள் மனை புக்கான்? போய்ப் புக்கான். எப்படிப் போனான்? உலவப் போய்ப் புக்கான். எங்கு உலவ? மருங்கு உலவ - பக்கத்திலே உலவ. எது மருங்கு உலவ - கால் - காற்று. எப்படிப்பட்ட காற்று? பைங்கால்? பசுமையான காற்று, - இளமையான காற்று - மெல்லிய காற்று. எதனுடைய பைங்கால் மருங்குலவ? கவரிப்பைங்கால்-சாமரையினது இளங்காற்று. எப்படிப்பட்டசாமரை? வெண் கவரி - வெண்சாமரை. [எந்த வெண்கவரி? வீசும் வெண்கவரி] எதனால் வீசும் வெண்கவரி? கையினால். எப்படிப்பட்ட கையினால்? செம் கையினால் - சிவந்த கைகளால். யார் சிவந்த கையினால் வீசும் வெண்மையான கவரியிலிருந்து வருகின்ற மெல்லிய காற்று? குழலார் - கூந்தலையுடைய மாதர். எப்படிப்பட்ட குழலார்? கரும் குழலார் - கரிய கூந்தலையுடையவர். இன்னும் எப்படிப்போனான்? ஆர்ப்பப் போய்ப் புக்கான் - சப்திக்கவும் போய்ச்சேர்ந்தான். எது ஆர்ப்ப? முரசம் ஆர்ப்ப - முரசவாத்தியங்கள் சப்திக்க. எப்படிப்பட்ட முரசம் ஆர்ப்ப? வார்முரசம் ஆர்ப்ப - வார்களால் இறுக்கிய முரச வாத்தியங்கள் சப்திக்க. இன்னும் எப்படிப் போய்ப்புக்கான்? ஏங்கப் போய்ப்புக்கான் - ஒலிக்கவும் போய்ச்சேர்ந்தான். எப்படி ஏங்க? நின்று ஏங்க - இடைவிடாமல் ஒலிக்க. எது நின்று ஏங்க? வளை - சங்குகள். எப்படிப்பட்ட வளை? புரிவளை-முறுக்குக்களையுடைய சங்கங்கள். எப்படிப்பட்ட முறுக்குக்களையுடைய சங்கு? நெருங்கு புரி வளை - அடர்ந்து முறுக்கிய முறுக்களையுடைய சங்கங்கள்.

குறிப்பு:—1. முதலடியில் பல நிறங்களைத் தொடுத்துப் பாடிய அழகு கவனிக்கத் தக்கது. இதனில் கருமை செம்மை வெண்மை பசுமை, என்ற வெவ்வேறு நிறங்களை ஒன்றாய்ப் பொருத்தி அமைத்திருக்கின்றார் கவி. யாப்பு இலக்கணத்தில் இப்படி வருகின்ற அடிக்கு முற்றுமுரண் தொடை என்று பெயர். யாப்பு இலக்கணம் செய்யுளில் சீர் அடி முதலியவைகள் அமைகின்றதைப் பற்றிச் சொல்வது. அதற்கு ஆங்கிலத்தில் Prosody என்றுபெயர். யாப்பிலக்கணத்தைப் பற்றி இதுவரையில் ஒன்றும் சொல்லவில்லை. இதற்குள் சொல்லப் போவதுமில்லை. ஆனால் அணிகளைப்பற்றிச் சொல்லியிருக்கின்றேன். முன் அணியென்றால் என்னவென்று (30-வது பக்கத்தில்) சொல்லி யிருப்பதையும், உவமையணி, ஒழித்துக்காட்டணி (30-வது பக்கம்) உயர்வு நவிற்சியணி (32-வது பக்கம்), உருவகவணி(70-வது,129-வது பக்கங்கள்), தற்குறிப் பேற்றவணி (131-வது பக்கம்) இவைகளது இலக்கணங்களையும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

இந்தச் செய்யுளில், கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால் மருங்குலவ, என்பது விரோதவணி. சொல் அளவிலேயாகட்டும் அர்த்தத்தினாலாகட்டும் ஒன்றற்கொன்று விரோதமாயிருப்பவைகளைச் சேர்த்துச் சொல்லவருகின்ற ஒருகருத்திற்குப் பொருந்தும்படி இணைப்பது விரோத அணியின் இலக்கணம். இங்குக் கருமை சிவப்பு வெண்மை பசுமை, ஆகிய நான்கு நிறங்களும் சொல்லளவில் ஒன்றற் கொன்று விரோதமானவை. விரோதம் என்றதற்கு இங்கே பகை என்ற பொருளல்ல. ஒன்றற்கொன்று மாறுபட்டன. இப்படி மாறுபட்ட நிறங்களைக் குறிக்கும் சொற்களை எல்லாம் சேர்த்து வீசியகாற்றிலே கொண்டுபோய்ப் பொருத்தமாக முடித்ததால் இது முரண்கொண்ட பலசொற்களை ஒக்க முடித்த விரோதவணி.



விரோத அணிக்கு வார்த்தைமாத்திரம் முரணாகவந்து விட்டால் போதாது. "தெருவிலே, வெள்ளைக் குதிரையும் சிவப்பு மாடும் கருப்பு நாயும் போயின", என்றதில் ஒரு அணியுமில்லை. இந்த நிறங்களெல்லாம் பொதுவான எந்த விஷயத்திற்கும் அனுசரணையாய் வரவில்லை. அப்படிக்கில்லாமல் நம் செய்யுளில் வந்திருக்கின்ற அணியைப் பாருங்கள். கருமையான கூந்தலை யுடையவர் சிவப்பான கைகளால் வெண்மையான சாமரையைக் கொண்டு வீசும் பசுமையான காற்று, என்று காற்று உலவியதென்ற ஒரே கருத்திற்குத் தக்கபடி நிறங்களைத் தக்க இடத்தில் கொடுத்து முற்றும் பொருத்தமாய் முடித்தார். இனி, விரோதவணி யென்றால் சொல்லளவு மாத்திரந்தான் மாறானவைகளைப் பொருத்திவைத்தல் என்றாவது, அதுவும் நிறங்களின் வேறுபாடுகளாகவே இருக்க வேண்டுமென்றாவது எண்ணிக் கொள்ளவேண்டா. எந்தச் சொல்லாயினும் எந்தக் கருத்தாயினும் எதிராயிருப்பவைகளைப் பொருந்தும்படி கூறினால் அது விரோத அணியாகும். சாதாரண உதாரணங்கள் ஒன்றிரண்டு காட்டுவோம்.

"சூரியன் மறையவும் சந்திரன் தோன்றவும் மாலைக் காலம் வந்தது":—சூரியன் சந்திரன், மறைதல் தோன்றல், இவைகள் ஒன்றற் கொன்று எதிர். ஆனால் சூரியன் சந்திரன், என்பன சொல்லளவில் மாத்திரம் எதிர்ப் பதங்களே யொழியப் பொருளில் முரண்பட்டனவல்ல. ஆனால் மறைதல் தோன்றல், என்பன சொல்லளவின்மாத்திரம் அல்லாது பொருளாலும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவை. ஆதலால், சூரியன் சந்திரன், என்பன சொல் விரோதம்; மறைய தோன்ற என்பன பொருள் விரோதம். இவைகளை எல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து மாலைக்காலச் செய்தியாகப் பொருத்தி முடித்தது விரோத அணி.

"பாபங்கள் அழியவும் புண்ணியங்கள் வளரவும் இராமன் பிறந்தான்," என்பதும் அப்படியே விரோத அணி ஆகும்.

பொருளாலும் சொல்லாலும் ஆக்கி ஒரே கருத்திற்கு இணங்கும்படி பொருத்தி முடித்த விரோத அணிக்குக் கீழ்வரும் செய்யுளை நினைவில் வைத்துக்கொள்வது நலமாகும்:—

காலையு மாலையுங் கைகூப்பிக் காதொழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாங்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்
பெருமானைச் சிற்றம் பலத்து. [தார்

அழகிய கருமையான யானைத்தோலையும் வெண்மையான விபூதியையும் சிவந்த சரீரத்தையும் பசுமையான மாலையையும் உடைய சிவபிரானைச் சிதம்பரத்தில் தரிசித்துக் காலையிலும் மாலையிலும் நாம் கைகூப்பி அவரது காலைத் தொழுதால் மேலான கர்மங்களெல்லாம் கீழாகப் போய்விடும், என்பது இச் செய்யுளின் பொருள். இதனில் வந்திருக்கின்ற முரண்களெல்லாம் ஒரே கருத்தில் பொருந்துகின்ற அழகை மறக்கக் கூடாது.

2. நின்று ஏங்க:—இங்கே நின்று என்பதற்கு இடைவிடாமல் என்பது அர்த்தம். செய்யுள்களிலே இந்தப் பதத்திற்கு இந்தப் பொருள் சாதாரணம்.

3. உலவ, ஆர்ப்ப, ஏங்க, என்னும் வினை யெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்திருக்கின்றன.

கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள்—மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றாற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன். 43.

வந்த தந்தையின் கால்களைப் பணிந்து தமயந்தி எழுந்தாள் என்பதை இச்செய்யுள் கூறுகின்றது.

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். 44.

அவ்வாறு தொழுதெழுந்து, வியர்வை வழிந்த நெற்றியினளாய் நின்ற தன்பேதைமகளைப் பார்த்து வீமராஜன் 'இவளுக்குச் சுயம்வரம் வைக்கவேண்டும். என்று எண்ணினான். நோயின் குறிகளைத் தன் மனைவி சொல்லக் கேட்டபோதே, இது காதல்நோயாகத்தான் இருக்கவேண்டு மென்று அவன் ஊகித்தபடியே அவளைப் பார்த்ததும் நிச்சயமாகி உடனே சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமெனும் தீர்மானங்கொண்டான்.

யாரோ ஒருவன்பேரில் இவளுக்குக் காதல் உண்டாயிருக்கிறது என்பது மாத்திரம் நிச்சயம். ஆனால், அது யார் என்று அவளைக் கேட்டால் நாணத்தால் வாய் திறக்க மாட்டாளென்பது அவனுக்குத் தெரியும். ஆதலால் சுயம்வரம் வைத்து எல்லா வரசர்களையும் வரவழைத்தால் அவர்களுள் ஒருவனாய் அவளது காதலன் வாராமலிரான். பின் அவனைத் தன்மகள் தேர்ந்து கொள்ளட்டும் என்பது விதர்ப்ப மன்னனின் சூழ்ச்சி.

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. 45.

பதப்பிரிவு:—மங்கை சுயம் வரம் நாள் ஏழு என்று வார் முரசம் எங்கும் அறைக என்று இயம்பினான் பை கமுகின் கூந்தல்மேல் கங்கை கொழுந்து ஓடும் நல் நாடன் வேந்தர்மேல் தூது ஓட விட்டு.

அன்வயம்:—கங்கைக் கொழுந்து பைங் கமுகின் கூந்தன்மேல் ஓடும் நல்நாடன், வேந்தர்மேல் தூது ஓட விட்டு, "மங்கை சுயம்வரம் நாள் ஏழ் என்று, எங்கும் வார் முரசம் அறைக" என்று இயம்பினான்.

பதவுரை.

கங்கை - கங்காநதியின்
கொழுந்து - அலைகள்,
பை - பசுமையான
கமுகின் - பாக்குமரத்தின்
கூந்தல்மேல் - பாளைகளின்மேல்
ஓடும் - பாய்கின்ற
நல் - வளப்பம் பொருந்திய
நாடன் - விதர்ப்பநாடுடையவனாகிய வீமராஜன்,
வேந்தர்மேல்-அரசர்கள்பால்
தூது - தூதர்களை
ஓடவிட்டு - விரைந்து அனுப்பி,
"மங்கை - தமயந்தியினது
சுயம்வரம் - சுயம்வரத்திற்கு
நாள் - நாட்கள்
ஏழு - ஏழு (இருக்கின்றன)"
என்று - என்று
வார் - வார்கட்டிய
முரசம் - முரசங்களை
எங்கும் - எல்லாத்தேசங்களிலும்
அறைக - அடியுங்கள்'
என்று - என்று
இயம்பினான் - விளம்பினான்.

**விரிவுரை :**—" பைங்கமுகின் கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் " என்பது விதர்ப்பநாட்டின் நீர்வளத்தைக் காட்டுகின்றது. பாக்குமரம் மிக உயரம். வெள்ளம் புரண்டுவரும் கங்கையாற்றின் அலைகள் பாக்கின் பாளையை எட்டியதென்றால் நீரின் மிகுதி தெரிகின்றது. ஆற்றினின்று அலை எழுவதைக் கொழுந்துவிடுவதென வருணித்தல் அழகிய கவி வருணனை. இவ்வாறே கம்பர் சித்திரகூட மலையை வருணிப்பவராய், அதனின்று அகிற்புகை அந்தணர் ஆகுதிப்புகையொடும் கலந்தெழுகின்ற தோற்றத்தைக்

" கரிய மால்வரைக் கொழுந்தெனப் படர்வன காணாய்"

என்று காட்டுகின்றார்.

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் [வண்டிரைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தாற்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். 46.

**பதப்பிரிவு :**—மா முத்தம் வெண் குடையான் மால் களிற்றான் வண்டு இரைக்கும் தாமத்து அரி சந்திரன் சுவர்க்கி நாமத்தால் பா வேய்ந்த செம்தமிழாம் என்ன பரந்ததே கோ வேந்தர் செல்வ குழாம்.

**கருத்து :**—தமயந்திக்குச் சுயம்வரம் என்ற செய்தி வெகு விரைவினில் அரசர்களுக் கிடையே பரவிக் கிளர்ச்சி யுண்டாக்கியது.

பதவுரை.

மா - பெரிய
முத்தம் - முத்துக் குச்சுகள் கட்டிய
வெண் - வெண்மையான
குடையான் - குடையை உடையவனும்,
மால் - மதங்கொண்ட
களிற்றான் - யானைகளை யுடையவனும்,
வண்டு - தேன் வண்டுகள்
இரைக்கும் - (மொய்த்து) ஒலிக்கும்
தாமத்து - மாலையை அணிந்த
அரி - சிங்கத்தைப் போன்றவனும் (ஆகிய)
சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்பவனுடைய
நாமத்தால் - பேரினால்
பா - பாட்டுக்களை
வேய்ந்த - புனைந்த
செம் - செம்மையாகிய
தமிழாம் என்ன - தமிழைப்போல,
(தமயந்திக்குச் சுயம்வரம் என்னும் செய்தி),
கோ - சிறந்த
வேந்தர் - அரசர்களது
செல்வம் - திருவமைந்த
குழாம் - கூட்டங்களுக்கிடையே,
பரந்தது - எங்கும் பரவியது.

சுயம்வர வதந்தி செந்தமிழைப் போல எங்கும்பரவியது.

**விளக்கம்:**—பரந்தது - பரவியது (பயனிலை). [எது பரவியது? சுயம்வரச்செய்தி, தோன்றாயெழுவாய். முன்பாட்டும்பின்பாட்டும் கூறியஉவமையும் கருதி, இந்த எழுவாயைவருவித்துக்கொள்ளவேண்டும்] எங்கே பரந்தது? குழாம் - கூட்டத்திற்கிடையே. எந்தக் கூட்டத்திற்கிடையே பரந்தது? செல்வக்குழாம் - திருவமைந்த கூட்டத்திற்கிடையே. யாருடைய செல்வக் குழாம்? வேந்தர் செல்வக்குழாம் - அரசர்களது திவ்விய கூட்டங்களில். எப்படிப்பட்ட வேந்தர்? கோவேந்தர் - சிறந்த வேந்தர்.

சிறந்த வேந்தர்களது செல்வம் அமைந்த கூட்டங்களுக் கிடையே தமயந்தியின் சுயம்வர வதந்தி எதைப் போல் பரவியது? தமிழ்ஆம் என்னப் பரந்தது - தமிழ் எப்படிப் பரவுமோ அப்படிப் பரவியது. என்ன தமிழ்? செம்தமிழ். என்ன செந்தமிழ்? வேய்ந்த செந்தமிழ் - புனைந்த செம்தமிழ். எது வேய்ந்த செந்தமிழ்? பா வேய்ந்த செந்தமிழ் - பாட்டுக்கள் கட்டிய செந்தமிழ். எதனால் பாட்டுக்கள் கட்டிய செந்தமிழ்? நாமத்தால் - பேரினால். யாருடைய பேரினால்? சந்திரன்சுவர்க்கி என்னும் வள்ளலினுடைய பேரினால்.

சந்திரன்சுவர்க்கி எதைப்போன்றவன்? அரிச் சந்திரன்சுவர்க்கி - சிங்கத்தைப் போன்ற சந்திரன்சுவர்க்கி. எதை உடைய சிங்கத்தைப்போன்றவன்? தாமத்து அரி-மாலையை அணிந்த சிங்கம். எப்படிப்பட்ட தாமம்? இரைக்கும் தாமம் - ஒலிக்கின்ற மாலை. எது இரைக்கும் தாமம்? வண்டு இரைக்கும் தாமம் - வண்டுகள் ஒலிக்கும் மாலை. அந்தச் சந்திரன்சுவர்க்கி எதைஉடையவன்? களிற்றான் - யானைகளையுடையவன். எப்படிப்பட்ட யானைகளை உடையவன்? மால்களிற்றான்-மதமயக்கங் கொண்ட யானைகளையுடையவன். இன்னும் எதை உடையவன்? குடையான். எப்படிப்பட்ட குடையான்? வெண்குடையான். இன்னும் எப்படிப்பட்ட குடையான்? முத்தம் வெண்குடையான் - முத்துக் குஞ்சகங்கள் தொங்கும் வெண்மையான குடையை உடையவன். எப்படிப்பட்ட முத்து? மா முத்தம் - பெரியமுத்தங்கள்.

**விரிவுரை :**—குழாம் பரந்தது, என்று முடிப்பது பொருந்தாது. விதர்ப்பநாட்டிற்குத் தலைநகரமாகிய குண்டினிபுரத்திற்கு அரசர்களது கூட்டம் வந்துசேரப் போகின்றது. இதனிலிருந்து எங்கும் பரவி அவர்களுக்குச் சந்தோஷத்தை யளித்த தமயந்தியின் சுயம்வரச் செய்தியே பரந்ததென்று கொள்வதுதான்தகும். இந்தச் செய்தி பரவிய விரைவையும் அதைக் கேட்டவர்கள் அடைந்த கிளர்ச்சியையும் கவி ஒரு சிறந்த உதாரணத்தால் எடுத்துக் காட்டுகின்றார். தமிழ் என்ற பதத்திற்கு இனிமை என்று அர்த்தம். கோமகளொருத்திக்குச் சுயம்வரம் என்றசெய்தி கேட்குமளவிலே இனிமையைத் தருமாதலால் அச்செய்தியைத் தமிழ்ப்பாஷைக்கு நிகராகக் கூறினார். அதுவும் தமயந்தி என்றவளுக்குச் சுயம்வரம் என்றால் அச்செய்தி பின்னும் பெருமையடைகின்றது. அது எப்படி இருக்கிறதென்றால், சந்திரன்சுவர்க்கியின் பேரில் சாற்றிய தமிழ்ப்பாட்டு எப்படி எங்கும் விரைவில் பரவி எல்லாராலும் இனிது வரவேற்றுக்கொள்ளப் படுகின்றதோ அப்படியே தமயந்தியின் பேரைச்சொல்லி அவளுக்குச் சுயம்வரம் என்றும் சொன்னவுடனே அது நொடியில் உலகெங்கும் பரவி மன்னவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கியது.

இவ்வாறு சொல்வது உவமையணியின் ஒருவகை. அதற்கு **எடுத்துக்காட்டு உவமை அணி**, என்று பெயர். அது எப்படியோ அப்படியே இது, என்று திருஷ்டாந்தம் காட்டுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. திருக்குறளின் முதற் செய்யுளாகிய, " அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு " என்றது இந்த அணிக்கு நல்லஉதாரணம். எல்லாஎழுத்துக்களும்எப்படி அ என்பதை முதலாக உடையனவாக இருக்கின்றனவோ, அப்படியே உலகம் ஆதிபகவனை முதலாகஉடையது, என்று திருஷ்டாந்தம் எடுத்து இங்குக் காட்டப் பட்டிருக்கின்றது.

**குறிப்பு :**—1. மா. கோ. என்பன ஓரெழுத்து ஒரு மொழிகள். இவைகள் ஒவ்வொன்றிற்கும் பல அர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுள், மா என்றதற்குப் பெரிய என்றும், கோ, என்றதற்குச் சிறந்த என்றும் பொருள் கொண்டிருக்கின்றோம்.

2. சந்திரன்சுவர்க்கி.—இவன் முரணையரசன் என்றும், புகழேந்தியின் உபகாரியென்றும், அவனைத் தன் கதையோடு சேர்த்துச் சிறப்பித்துப் பாடுகின்றவழக்கம் இக்கவிக்கு உண்டென்றும் முன் (33-வது பக்கத்தில்) கூறியிருப்பதைப் பார்க்கவும். தமிழோ சிறந்தது, அதனிலும் சந்திரன்சுவர்க்கியின் பேரைவைத்துப் பாடிய பாடல் மிகவும் கொண்டாடப்படும் என்று அவனைப் புகழ்கின்றார்.



செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யான்வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து. 47.

புள்ளுறைபுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 48.

இவ்விரு செய்யுள்களாலும், அரசர்களெல்லாம் தமயந்தியின் சுயம்வரத்தை முன்னிட்டு விதர்ப்பநகர் வந்து சேர்ந்து தங்கிய செய்தி கூறப்பட்டிருக்கின்றது.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 3. நகரப் படலம்.

18895

### வேதமன்ன வாயிலால் தேவதேவ ரேய்துவார்.

கடத்தற்கரிய அகழைக்கடந்து எய்தற்கரிய எயிலினை எய்தி நல்லவாறு சொல்லும் வேதம் நான்கனைய வாயில்களுள் ஒன்றினூடு புகுந்து உட்புறம் நண்ணிய காலையில் முதலிலே பொதுவாய் நோக்குகின்ற நம் கண்கள் கண்டது நகரோவென்னினன்று——கடலே கண்டது, அக்கடலும் பாற்கடல்; மலையே கண்டது, அம்மலையும் கைலையங்கிரியே.

திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றரங்கம் போலுமே.

[இதனைக்கண்ட கண்களுக்குச் சந்திரனும் கரியது என்று தோன்றும்படி சங்கைச் சுட்டுச்செய்த வெண்ணிறச் சுண்ணாம்புவைத்த மாளிகைகள் ஒன்றன்மேலொன்று உயர்ந்து வரிசை வரிசையாய் எழுகின்ற தோற்றம், காற்றால் அலைப்புண்டு மேனோக்கிப் பொங்கியோங்கும் பாற்கடலின் அலைகளைப்போன்றது.]

புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளியங் கிரிமிசை விரிந்த போலுமே.

[புள்ளிகளையுடைய புறாக்கள் வசிக்கும் மாளிகைகளின் மேல் (கும்பம் கோபுரம் போன்றவைகளுக்கு) பொன் தகடுகள் பதிக்கப்பட்டிருந்த தோற்றம், களங்கமற்ற காலைச்சூரியனின் சிவந்த வெயில் கிரணங்கள் (பனிதோய்ந்த) வெள்ளிமலையாய கைலாயகிரியின்மேல் விரிந்தது போன்றது].

ஆதலால், வேதமன்ன வாயில்புக்கு வந்தவீதி நோக்குங்கால், எது தோன்றும்? தேவதேவர் ஒருவரேனும் இருவராகிப் பள்ளிகொண்ட பாற்கடலும் வீற்றிருக்கும் பருப்பதமும் அன்றியே!

இவ்விரு செய்யுள்களின் கருத்து வேறாயினும் அவ்வருணனையிலுள்ள பாற்கடல் இளவெயில் நெடுமலை முதலிய நினைவுகளைக் கம்பருக்குச் சிந்தாமணிச் செய்யுளொன்று அளித்திருப்பினும் இருக்கலாம். அது பின்வருமாறு.

விளங்குபாற் கடலிற் பொங்கி
வெண்டிரை யெழுவ வேபோல்
துளங்கொளி மாடத் துச்சித்
துகிற்கொடி நுடங்கும் வீதி
உளங்கழிந் துருவப் பைந்தார்
மன்னவன் கோயில் சேர்ந்தான்
இளங்கதிர்ப் பரிதி பௌவத்
திறுவரை யிருந்த தொத்தான்.

'மலைபோன்ற யானைமீது வந்த ஜீவகன், உதயகிரியில் பொருந்திய இளஞ்சூரியன்போல் தோன்றிப் பாற்கடலின் அலைகளைப்போல் அசையும் துகிற்கொடிகள் கட்டிய மாடங்களின் வரிசையமைந்த வீதிவழியாய்ச் சென்று அரசனது கோயிலைச் சேர்ந்தான்,' என்பது இச்செய்யுளின் பொருள்.

இச்சிந்தாமணிச் செய்யுளின் உவமைகள் அது கூறும் சந்தர்ப்பத்திற்கு ஒக்கும். ஆனால், எங்கெங்கும் வெண்மையே நிறைந்து விளங்கிய நகரத்தையே பாற்கடலின் தோற்றமுடையதாகக் கம்பர் கருதினாதலின் சிறுகொடிகள் அதனிற்கு அலைகளாவதற்குப் பற்றாவென விலக்கி மாளிகைகளையே தரங்கமாக்கினார். (இவ்வுவமையில் துகிற்கொடிகளை வேண்டுமாயின் அலைகளின் கொழுந்தென்று கூறலாம்.) மற்றுத் திருத்தக்கதேவர் யானைக்கு உவமையாய்க் காட்டிய உதயகிரியை மாற்றி மீண்டு மம்மாளிகையையே தனித்தனி வெள்ளியங் கிரிகளாய்க் கொண்டனர். சீவகனெனும் இளஞ்சூரியனின் கதிர்களைத் தன் பனிவரை முடியின்மேல் வீசினார். வெண்மையே விளங்கும் மாளிகையின் சிகரம் செம்பொற்றகடு வேய்ந்திருக்கவே அது, காலையிற் றோன்றுங் கயிலைபோலாயது. உதிக்கின்ற சூரியனின் செவ்வண்ணக் கிரணங்கள் சாய்ந்தேறி இமயத்தின் உச்சியில்மாத்திரம் படுமாதலால், மற்றவிடமெல்லாம் வெண்மையாயிருக்க, அங்குப் பளிங்குபோல் பனி அங்கிறத்தைத் தானேற்றுச் செம்பொன் தகடுகாட்டும். காட்டுமெனினும் இவ்வர்ண விளையாட்டைக்கம்பரின் உதவியின்றி யாரே காணவல்லார்!

கருத்தொன்று சிறந்து நம்மனதில் தோன்றினால் அதனைச் செப்புதற்குச் சொற்கள் வந்து இணங்கும் என்பர் மானஸதத்துவம் ஆய்ந்தவர்களுள் ஒருசாரார். இன்னொருவா, கற்பனைத்திறத்தில் பழகிய மனதிலே சொல்லொன்று நினைக்க அதனால் சிலவேளை புதிய கருத்துக்கள் உதிப்பதும் இயலும் என்பர். இவ்விரண்டுரைகளும் ஒவ்வோர்வகை யுண்மையே என்பதை இங்குக் கம்பர்பால் காண்கின்றோம். முன் நகரவாயிலை நான்மறைக்கு நிகராக்கியது கம்பரின் கற்பனைத்திறம். இனி, வேதத்தின் வாயிலாக எய்துதற் கியன்ற விடங்கள் பாற்கடலும் பனிவரையுமே யாகு மெனும் கருத்துக்கள் அவர் மனத்துள் உருப்பெற் றெழுமாறு

துண்டியன சிந்தாமணிச் செய்யுளில் வந்த சில சொற்களாம். "இளங்கதிர்ப் பரிதி பௌவத் திறுவரை'' என்ற வாக்கியத்திற் சிதறிக்கிடந்த சொற்கள், பனிவரை மீது பரிதியின் இளங்கதிர் பாய்கின்ற தோற்றத்தை நம் கவியின் மனதில் திரண்டெழச் செய்தன. செய்யவே, அது, வாயில் வேதமாகிய கற்பனைக்கடுத்த கருத்தாகிப் பொருத்த முற்றது.

இதுகாறும், புக்கவர் நகரினைப் பொதுநோக் கெறிந்து நோக்குங்கால் நினைக்கலாகும் நினைவுகள் நம்மனத்தே நிகழ்த்தினர் நம் கவிவாணவர்.

இன்னவாறு நிகழ்கின்ற நினைவோடு இனி நெடுவீதி படர்கின்றோம். வயிரக்கால் நிறுத்தி யதன்மீது கிடத்திய மரகத உத்திரங்களின்மேல் சித்திரச்சிலைகள் எண்ணிறந்தன எங்கும் நிற்கின்றன. இமையாது நோக்குகின்ற விண்ணவரும் இவை ஒருகால் இமைத்தனவோ என்றயிர்ப்பர் எனின், 'உயிர்கொல் உருவங்கொல் இவை' என எம்மனோர் மயங்குவது வியப்பன்று. சிற்பியின் கைத்திறம் இருந்தவா றவ்வாறு.

மாளிகைதோறும் நின்று அடிமுதல் முடிவரை அண்ணாந்து பார்க்கின்ற நம் கண்கள் பண்டைநாட் செய்த பாக்கியம் பெரியதே. சந்திரகாந்தமும் இந்திரநீலமும் முத்தும் பவளமும் சந்தனமரமும் மரகதமணியும் இவையே கலந்து இல்லெலாம் இயன்றன. இராஜவீதியாதலால் மன்னர் குலமாளிகைகள் இவ்வகைச் செல்வமுற்றிருத்தல் இயற்கை என்று எண்ணுவீராயின் சிறுமறுகு சென்று காண்மின், அங்கிருந்த மனைகளுங்கூட :—

> வானுற நிமிர்ந்தன வரம்பில் செல்வத்த
> தானுயர் புகழெனத் தயங்கு சோதிய
> ஊனமி லறநெறி யுற்ற வெண்ணிலாக்
> கோனிகர் குடிகடங் கொள்ளை சான்றன.

[வானளவு உயர்ந்தன. வரம்பு கடந்த செல்வத்தையுடையன. உயர்ந்த புகழைப்போல் விளங்குகின்ற பிரகாசத்தை யுடையன. பழுதற்ற அறநெறிபற்றிய குடிமக்கள் அரசருக்கு நிகராகக் கணக்கின்றி வாழப் பெற்றன]

> அருவியிற் றாழ்ந்துமுத் தலங்கு தாமத்த
> விரிமுகிற் குலமெனக் கொடிவி ராயின
> பருமணிக் குவையன பசும்பொற் கோடிய
> பொருமயிற் கணத்தன மலையும் போன்றன.

[அருவிபோல் தாழ்ந்து அசையும் முத்துமாலைகள் தொங்கப் பெற்றன. விரிகின்ற மேகக் கூட்டங்கள் போல் கொடிகள் அடர்ந்தன. இரத்தினங்களும் பொன்னும் எங்கும் நிறைந்தன. கோபுரச் சிகரங்களில் சூலங்கள் நட்டிருப்பன. அருவியும் மேகமும் மணியும் பொன்னும் அமைந்திருத்தலால், அந்தமனைகள் அளவினால் மாத்திரமேயல்லாது, இவைகளாலும் மலைகளையொக்கும். (பொரும்+அயில் என்றும், பொரும்+மயில், என்றும் அத்தொடரையே இருவிதமாகப் பிரித்து, முன்னதை மனைக்கும் பின்னதை மலைக்கும் பொருத்திக் கொள்ள வேண்டும்]

> அகிலிடு கொழும்புகை யளாய்ம யங்கின
> முகிலொடு வேற்றுமை தெரிக லாமுழுத்
> துகிலொடு நெடுங்கொடிச் சூல மின்னுவ
> பகலிடு மின்னணிப் பரப்புப் போன்றவே.

[மாளிகைகளிலிருந்து அடர்ந்து எழுகின்ற அகிலின் புகையோடு கலந்து துகில் கொடிகள் மேகத்தினின்றும் வேற்றுமை தெரியாமலிருக்க, அக்கொடிகள் கட்டிய கால்களின் நுனியிலுள்ள சூலங்கள் பகலிலே வீசுகின்ற மின்னலைப்போல் விளங்கின.]

ஆதலால், அரசர் மனைகளுக்கு எள்ளளவும் அந்நகர்க் குடிகளின்மனை செல்வச்சிறப்பினில் குறைந்தனவல்ல. பெருமனையும் சிறுகுடிலும், மிதமிஞ்சி யுண்போரும் சோறின்றிச் சோர்வோரும், பட்டுடை யுடுத்தபேரும் அற்றங்காக்கச் சிற்றுடை யற்றோரும் அயலே விரவிக் கிடக்கும் தற்கால நாகரிக நகர்களே கண்டறிந்த நாம்,

> "மணியினும் பொன்னினும் வனைந்த வல்லது
> பணிபிறி தியன்றன பாங்கு மில்லையே!''

[மணிகளாலும் பொன்னாலும் ஆக்கியவைகளே யல்லாமல், வேறுவித மாளிகைகள் சிறுபக்கங்களிற் கூட இல்லையே] என்று மேலெழுந்த வியப்பினால் விளம்புவோமாயின், அயல்வரும் கம்பர்பிரான், "ஐய, இறும்பூது என்! வெளிச்சிறப் பொன்றோ இவ்வில்லங்களுக்கு! செல்வ மாதரும் வீரரும் உட்புறம் வளர்கின்றனர். உள்ளும் புறமும் இம்மனைகள் திருவோடு வளர்கின்றதற்குக் காரணமும் சொல்கின்றேன்'' என்பவராய்,

> "அணியிழை மகளிரு மலங்கல் வீரரும்
> தணிவன வறநெறி தணிவி லாதன''

[இம்மனைகள், அழகிய ஆபரணங்க ளணிந்த மாதர்களும், மாலைகளைத் தரித்த வீரர்களும் செழித்து வளரப் பெற்றன. ஏனெனில் (வறியர் விருந்தினர் முதலியோரை ஓம்புதல் ஆகிய) இல்லறத்தின் முறைகள் ஒருபோதும் குறைவுபடாதன] என்று சுருங்கச் சொல்லி விளக்கி வைப்பர்.

அயோத்திமா நகரின் மாண்பு இவ்வுலகின்கண் இனையதாக, விண்ணினையது ஆட்டிவைக்கின்ற ஆட்டம் கொஞ்சமல்ல. வானியங்கும் இருசுடரும் இமையவருலகும் யாவும் வாழ்வதும் தேய்வதும் இவ்வயோத்தியின் இஷ்டத்தைப் பொருந்தியதா யிருக்கின்றது. உயர்வு நவிற்சியாகக் கம்பர் இவ்விஷயத்தை இரண்டொரு செய்யுள்களில் செப்புகின்றார்

அயோத்தியால் குறையெய்தியது சந்திரன் ஒன்றுதான். ஏனோ பாவம், திங்கள்பால் சிறிதுபகை இப்பதிக் கிருந்தது? சங்கவெண் சுதை தீற்றிய மாளிகைகள் மதியை முன் கரிதென ஆக்கிவிட்டன; அதுவன்றி,

> காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போல்
> கோணமிர் பதாகையின் குழாந்த ழைத்தன
> வாணனி மழுங்கிட மடங்கி வைகலும்
> சேண்மதி தேய்வதக் கொடிக டேய்க்கவே.

[பெரியமலையில்வளர்ந்த வாழைக்காடுபோல்தோன்றிக் கிரகமண்டலம் வரையில் உயர்ந்த கொடிகளின் கூட்டம் மிகுந்திருந்தன. அந்தக்கொடிகள் தேய்த்துத் தேய்த்துத்தான் ஒளியானது மிகவும் மழுங்கி வளைந்துபோய் நாளுக்குநாள் தூரத்திலுள்ள சந்திரன் தேய்வடைகின்றது.]

மதியின்கதி இதுவாயிற்று. பொன்னுலகு என்ற பெருமையைத் தேவர்வாழ் தலமும் எவ்வாறடைந்ததெனின்,

> மின்னென விளக்கென வெயிற்பி ழம்பென
> துன்னிய தமனியத் தொழிற மைத்தவக்
> கன்னிநன் னகர்நிழல் கதுவ லாலரோ
> பொன்னுல காயதப் புலவர் வானமே.

[மின்னலைப்போலவும் விளக்கைப்போலும் வெயிலைப் போலவும் ஒளிர்கின்ற மிகுந்த பொன்னைக்கொண்டு அமைத்த அவ்வழிவில்லாத அயோத்திமாநகரின் ஒளி சென்று தாக்குவதாலல்லவா தேவலோகமும் பொன் உலகு என்று சொல்லும்படி ஆயிற்று.]

அயோத்தியின் நிழல்பட்டுத் திகழ்கின்ற அவ்வுலகை இமையா நாட்டம்பெற்ற தேவரும் உண்மையிற் பொன்னுலாயது எண்ணெண்ணி மதிமோசம் போகின்றனர். இந்த இரகசியத்தைச் சொல்லி வைப்பதற்குக் கம்பரே வேண்டும். மற்றினிப் பொன்னுலகாயவானும் சிலவேளை இந்நகரின் நிகழ்ச்சியால் மண்ணுலகும் ஆகிவிடுகின்றது. சிவன் பிடித்த வில்லைச்செற்ற இராகவன்தன் திருமணத்திற்குத் தயாதன் பரிவாரம் புடைசூழ அயோத்திவிட்டெழுந்து,



> "நோக்கியதிசைகளெல்லாந் தன்னையேநோக்கிச்செல்ல
> வீக்கியகழற்கால் வேந்தர்விரிந்தகைம் மலர்கள் கூப்பத்
> தாக்கிய களிறுந்தேரும் புரவியும் படைஞர்தாளும்
> ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான்.

[திசையெலாம் பார்த்தவர் இவனது முகத்தையே பார்த்துவரவும், கழல்தரித்த வேந்தரெல்லாம் தம்மலர்க்கரம் குவித்திருக்கவும், ஒன்றோடொன்று நெருங்கி மோதிய யானைகளும் தேர்களும் குதிரைகளும் படைஞர்கால்களும் கிளப்பிய புழுதியின் மிகுதியானது எங்கும் படர்ந்து ஆகாயத்தில் படிந்து தேவலோகத்தையும் மண் உலகு ஆக்கும்படி போயினான்,] என எழுநூற்றைம்பது பாடல்களுக்கப்பால் காட்டுவதால் வானவர்தம் பெருநாட்டின் சிறப்பு இழிவு இரண்டிற்கும் அயோத்தியே காரணமாயிருப்பது தெரியவருகின்றது.

T. N. சேஷாசலம்.

# அரசியர் மலர்வன மல்லிகை

## John Ruskin's
## Lilies of Queens' Gardens.

(213-வது பக்கத் தொடர்ச்சி.)

மாதர் இயல்பும் அவர்தம் தகுதியும் உரிமையும் முடிவாய் இதுதானென இதுகாறும் தேர்ந்திடாத இவ்விஷயத்தைப்பற்றி நாம் ஒருவாறு துணிதல் அவசியமாம். மேலே நாம் கண்ட பெரியார் அனைவோரும் தவறியுள்ளாரோ? அல்லது தவறியவர் நாம்தானோ? ஷேக்ஸ்பியரும், தாந்தேயும், ஹோமரும், மற்றுப் பலரும், நமது பொழுதுபோக்கிற்கென்று சமைத்த பதுமைகளோ அன்னவர் நூலினுட் பிறந்து நடந்தாண்ட பாவையர்கள்; அல்லது விளையாட்டுப் பதுமையினும் இழிவானதான பொய்ம்மைத் தோற்றங்கள் தானோ? அவர் சொல்லிவைத்த நிலையொருகால் வந்துற்றபோதிலும், வாழ்க்கையில் அது துக்கமொடு துன்பத்தையும், குழப்பமொடு நாசத்தையுந்தான் தந்திடும் என்பது உங்கள் எண்ணமோ! இவ்வண்ணம் நீங்கள் கருதுவீரேல் மனிதரின் மனதே கூறும் சான்றுதான் என்னவென்று சற்று நோக்குங்கள். வாய்மையொடு தூய்மையும், அமைதியொடு ஒழுக்கமும் சேர்ந்த வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பேர்போன இக்கிறிஸ்துவ சகாப்தத்தில் நங்கையொருத்தி கிழித்த கோடு கடந்தறியான் ஆடவன் என்பதை நீங்கள் அறிவீர். நெஞ்சிடை யெழுந்த காமக்கிளர்ச்சியால் களியனொருவன் செய்யும் கருமமென்று கருதாதீர் இவ்வழிபாட்டை. வாழ்க்கைக்கியன்ற வினைகளில் தலைவன்பெறும் வெற்றிக்குரிய புகழுரையும் பரிசிலுமே தருவதுடன் மங்கைமார் அமையாது, செய்வினை தேருதற்குற்ற துணையாய்த் துணிந்ததை முடிக்க ஊக்கமுமாய் அவள் கிளர்கின்ற காரணத்தால் எழுந்ததே இவ்வழிபாடு என்றறிவீர். எளியவர்மாட்டுக் கருணையும், அன்பேயாய மனமும், அறங்காத்த வாளிலங்கும் கைகளையும் பெற்ற வீரர் செறிந்திருந்த அந்நாளில் (The days of Chivalry)செய்வதற்குரியதோ இதுவெனக் கருதாது காதல் நங்கையொருத்தி இட்டகட்டளையை வேதமொழியெனக் கொண்டு நடப்பதே முறைமையும், சீரிய வாழ்க்கையுமாய் வாய்ந்திருந்தது. 'இத்தகைய ஒழுக்கமிலான் களியனும் காமுகனும் கீழ்மகனுமே யாவான். அவன் பெற்ற உடல்வலியும், செயலின் ஆற்றலும் தீதேயாய் முடியும்,' என்னும் வாய்மையை ஆன்றோர் கண்டிருந்தனர். ஆனால் இங்கு ஓர் ஐயம் சிறிதெய்தி மடவார் இட்டதே சட்டமெனக் கொள்ளுதல் எப்பொழுதும் நன்மை பயக்குமோ என்று, நீங்கள் கேட்கலாம். நல்லொழுக்கமும், நற்பழக்கமுமுடைய பெருமகன் எவனும் சீரிய குணநலச் சிறப்பிலாத் தகுதியற்ற இழிதகைப் பெண்ணுடன் பழகவே மாட்டான், இது சாதம்.

இனிமேல் இவ்விஷயத்தைப்பற்றிப் புதியபுதிய சான்றுகள் தேடி நான் வற்புறுத்தப் போவதில்லை. இருந்தது கூறினேன், கேட்டீர். கல்விப் பயிற்சியால் நீங்கள் பெற்ற அறிவுகொண்டு 'இனி இருக்கவேண்டுவது என்ன' என்று ஊகித்துணர்தல் கூடும். வீரனுக்கு அவன்மனைவி, தனது மெல்லிய கரங்களால் போர்க்கவசம் பூட்டிச் சமர்க்களம் அனுப்புவது என்பது, பண்டை வழக்கத்தின் வாய்ப்பட்ட பொருளற்ற செயலென்று சிறிது சிரித்துச் செல்லவேண்டாம், ஐய. இதனில் ஆழ்ந்த பொருளுண்டு. நாயகி தன்செவ்வியகரத்தால் அன்பொடு அணியும் கவசந்தான் உள்ளத்துடன் இயைந்து ஆன்மகவசமாய் அமைகிறது. ஆண்மை யழிந்து அவன் நசிப்பதும் அவள் மெய்யொடுமனமும் சோதிடும் அரைக்கவசத்தால்தான்......

பொழிலிடைப் பிறந்தநேயம், கையுறையும் சூள்மொழியும் நீர்வார்க்கக் கொழுந்தோடி வளருங்கால் காதலிருவர் பெற்ற உள்ள நிலையைப் பற்றியாவது என்னுடன் சேர்ந்து நீங்களும் 'ஓம்' என்பீர் என்றே எண்ணுகின்றேன். காதல் வளர்ந்து மணவினையாய் மாறிய பிறகும் அன்புநிலை முன்போல்இருந்துவரக் கூடுமோ என்று நாம் ஐயுறுகிறோம். அத்தகைய உள்ளநிலை காதலர்மாட்டிருத்தல் அமையுமெனினும், புருஷன் மனைவி என்ற உறவில் அதுபொருந்தா நிலையாகும் என்று எண்ணிவிடுகின்றோம். ஏனெனில் காரணமு முளது. நம் மனத்திறை கொண்ட மாணிழையாள்தன் உள்ளக்கருத்தையும் அன்பின் ஆழத்தையும் அளவுகாண முடியாது, கிடைக்கப் பெறுவோமோ இச்செல்வியை என்று திகைப்புற்று, அவள் நட்பைப்பெறக் கையுறை கொண்டு செல்வதும், அருஞ்சூள் கூறுவதுமாகிக், காதலவள் இதழ் அசையத் தானசைவதுமாய் வழிபட்டு முடிவின் வகை தெரியாது வாழ்கின்றோ மாதலால்தான். மணமாய் மாறியதும், மனைவியின் தத்துவம்போய், அவள் உடைமைப் பொருளாய் அமைய, எல்லா உடமைப் பொருளும் அடையும் நிலையே அவள் கிடைக்கப்பெறுகிறாள். இதுதானா மணவினையால் மனிதன் பெறவேண்டுவது? தேமாம் பொழிலிடைக் காமன்கணைதாண்டக்கிளர்ந்த அன்பும்வழிபாடும் சாச்வத வாய்மையாய் மாறவேண்டுவது அல்லவோ திருமணம் செய்யும் ஒருதனி உதவியாகவேண்டும். ஆனால் 'ஐய, துணையாய் அமையும் தன்மையும், பதிக்கு அடங்கி நடக்கும் மனையாள்தொழிலும் எவ்வாறு பொருந்தும்' என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். ஆம், நன்றாகப் பொருந்தும். மனைவியென்னு மறத்தினின்றுந் துணைவி எனநிற்றல் மாறுபட்டதில்லை, அறிவீர். 'இதுஇது' அவன் கருமமென விதிவகுக்காது, வாழ்க்கை போமளவும் வழித்துணையா யிருத்தலாற்றான் அவை பொருந்தும். வாழ்க்கைத் துணைவிதான் மனைவி. ஆடவன் இட்டவேலையைச் செய்யும்பணியாளும் அடிமையும் அல்லள்பெண். இதனைச் சிறிது விளக்குவாம்.

ஒன்றேயான பொருள்களுக்குள்தான் இது உயர்ந்தது இதுதாழ்ந்தது என்று ஒப்புநோக்க இயலும்.ஆனால், சிருஷ்டியிலேயே வேறாய் அமைந்த ஆண் பெண் என்னும் இருபாலார்தம்மில்,உயர்ந்தாரிவர் தாழ்ந்தாரிவர்எனவகுத்தல் அறியாமையிற் பிறந்த ஆராய்ச்சியாகும். ஒரு பொருளிற் கில்லாத குணம் மற்றொரு பொருள் பெற்றிருக்கக் காண்கிறோம். ஆடவனோடு பிறவாச்சில நலங்களை மகளிரிடமிருந்துபெற்று அவன்சிறப்படைகிறான். அவளுக்கும் அவ்வாறே. எனவே ஒருவருக்கு மற்றவர் இன்றியமையாத் தன்மையில் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில் உயர்வும் தாழ்வும் நமது சிறுமையால் நினைப்பதேயன்றி, உண்மையில் அவ்வாறு ஒன்றுமில்லை என்பது விளங்கவில்லையா ? தானொன்று கொடுத்துப் பிறிதொன்று வாங்கியே இருபாலாரும், வாழ்க்கை நலமெல்லாம் எய்துகின்றனர்.

இனி ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையிலேயே வேறாயமைந்த குணங்களின் தன்மை என்னென்று பார்ப்போம். புருட சக்தியோ, செய்யும் வினை தேடிச் செல்வதும், செய்வதும், செய்ததைக் காப்பதுமாகும். அவன் புதியனதேடுவதும், தேடியதைப் பெற முயலுவதும், போரும், வெற்றியுமான வேலைகளை மேற்கொள்கிறான். பெண்ணின் சக்தியோ போரையும் பூசலையும் தேடுவதில்லை. இருந்தவிடமிருந்து அமைதியேயான ஆட்சி செலுத்துவதே பெண் இயல்பு. புதியன நாடிப் பாய்வதில்லை அவள் மனம். கண் கண்ட பொருள்களைக் கொள்வதும் கவர்வதும் பெண் இயல்பில் இல்லவேயில்லை, ஆனால் பொருளின் இடத்தையும், தன்மையும்தேர்ந்துமகிழ்கிறாள். அவள்செய்யும்வினையும், வெற்றித்திருவைப் பற்றியகையனாய் வரும் கோமகனுக்குப் புகழுரை தருவதும் பூமாலை சூட்டுவதுமே யாகும். வழக்கில் புகாது வெற்றிமுடியை உரியவனுக்கு அளிக்கும் நியாயாதிபதி அவள். செய்வினையால் தனதாகப் பெற்ற ஸ்தானத்தாலேதான், எல்லாவித ஆபத்தினின்றும் காப்பாற்றப் பெறுகிறாள் பெண்.

மனிதனோ தனது இயற்கைக்கேற்ப வெளியிடத்தில் முரட்டுக் காரியங்களை கையாள்கின்றான். அதன் பயனாகப் பல கஷ்டங்களும், ஆபத்துக்களும் அவனைச் சுற்றிக்கொள்ள, அதனால் வெற்றியும் தோல்வியும் கோபமும் தவறும் அவனுக்கு இயல்பாகின்றன. பலமுறை காயமடைவான், அடக்கப்படுவான், தவறான வழியிலும் செலுத்தப்படுவான், எனவே அவன் எப்பொழுதும் கல்நஞ்சம் படைத்தவனாகின்றான். ஆனால் பெண்ணை மாத்திரம் எவ்விதத் துன்பமும், தொல்லையும் ஆபத்தும் அவளை யணுகா வண்ணம் தன்னுயிரையும் மதியாது அவன் காக்கக் காண்கிறோம் மனைவியே மன்னி ஆளும் ஒருவன் இல்லத்தில் அச்சமும் ஆபத்தும் அவளே விரும்பி யழைத்தாலன்றி நுழைவதில்லை, சரதம் இது. ஆதலால் அவளுறையுமிடத்தில் குழப்பமுமில்லை, நெஞ்சக் கலக்கமில்லை,கோபமுறவும் தவறுவதற்கும் காரணமுமில்லை, கண்டீர். இதுதான் பெண்காக்கும் வீட்டின் மெய்யியல். சாந்தியின் இருப்பாகும் அவ்வறச் சாலையில் அச்சமும் ஐயமும், கேடும் கலக்கமும் எங்ஙனம் புகக்கூடும்! வெளியிடத்து அல்லல்களும், விரும்பத் தகாதார் கூட்டமும் நாட்டமும் வீட்டினில் நுழையுமேல் அப்பொழுதே வீடு தனது மெய்யியலை இழந்துவிடுகிறது. மேற்கூரையும், மடைப்பள்ளியும் இருந்தும் அது வீடாகாது, வெளியிடத்தின் ஒரு பகுதியேயாகும். தாய்மைக்கு இருப்பிடமாய், இல்லறம் நடத்தும் யாகசாலையாய், வாய்மை வைகிய கோயிலாய் இருக்கும்வரைதான், அடுப்பும் கூரையும், வெஞ்சுரத்தி னிடையுள்ள பாறை நிழல்போலவும், புயலில் தடுமாற்றங் கொண்டு தவிக்கும் மாலுமிக்குத் தீபஸ்தம்பம் போலவும் இருந்து வீட்டின் மெய்த் தத்துவத்துடன் விளங்குகின்றன.

கூரையுஞ்சுவருமாயினும் சரி, அது வெட்டவெளியாயினும்சரி; எங்கெங்கே உயர்குண மங்கை யொருத்தி மனையாட்டியாக விருக்கிறாளோ அங்கெல்லாம் 'வீடு' இருந்தே தீர்கிறன்து. அடுப்பும், கூரையும் அவசியமில்லை. விண்மீன் செறிந்த வானமே அவள் தலைக்குமேலிருந்தாலும்,மினுமினுப் பூச்சியே விளக்காயமைந்தாலும், புல்தரையே மணியாசுசெய்த கூடமாய் விளைந்தாலும் உத்தமி இருக்குமிடமெல்லாம் வீடேதான். மாடி வீட்டினும், வர்ணம் பூசிய சுவரினும் சிறக்கச் சீரிய பெண்ணொருத்திதானிருக்குமிடமெல்லாம் ஒளியும் அமைதியும் காப்பும் தந்துதவுகிறாள்.

ஒரு பெண்ணின் இடமும் தன்மையும், அவளது கருமமும் இவைதான்என்பதை இனியேனும் ஒத்துக்கொள்ள மாட்டீர்களா? மேலே கூறியவாறு அவள் தனது ஸ்தானத்தைச் சிறக்கச் செய்ய அவள் தவறியும் தவறுசெய்ய முடியாதவளாயிருக்க வேண்டுமல்லவா ? அவள் ஆட்சியின் கீழுள்ள தெல்லாம் சரியாயிருக்கவேண்டுமெனின் அவள் தூய மனத்தையும் உயரிய வாழ்க்கையையும், அறிவையும் பெற்றிருத்தல் அவசியமன்றோ? அறிவும் தன்புருஷனை அடக்கிவைப்பதற்கல்ல, சமயம்வரின் தன்னையே துறக்கவும் சித்தமாயிருக்கும் மனநிலை ஏற்படவேதான். அப்பொழுதுதான் அவள் புருஷன் பக்கத்தை எந்நிலையிலும் விட்டு நீங்கா வழித்துணைவியாய், வாழ்க்கையின் விளக்காய் அமைதல்கூடும்.

K. இராஜகோபாலன்.

# அகப்பொருள் வரலாறு.

[216-ம் பக்கத் தொடர்ச்சி]

### பாங்கியிற் கூட்டம்.

இவ்வாறு பாங்கி உடன்பட்டு உடனிருந்து கூட்டிவைக்கத் தலைமகளுந் தானும் மேகந்தவழும் நாகப்பூம் பொதும்பரில் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்த தலைமகன், இனிப் பாங்கனுதவியாலும் பாங்கியின் விரகாலும் தலைவியை விரும்பியவண்ணம் எய்தப் பெறலாமென்ற துணிவால் வரைந்து கொள்ளும் நினைவைமுற்றும் மறந்து, பின்னும் பழைய கரவொழுக்கத்தையே நயப்பானாயினான், சிற்றின்பத்தை நாடுஞ் சிறியோர் சிந்தை தெரியவுண்ணுந் தேனினும் மறையப்பருகு மதுவையே இனிதாக் கொள்ளுதல் இயல்பாதலின். ஆதலான் முன்போலவே அன்றும் அவன் முன்னாட்குறியிடஞ் சேர்ந்து, அதன்மாட்டொரு மாச்செறிவில் தலைவி வரும்வழியை உற்று நோக்கி ஒளிந்திருந்தான். அப்பொழுது முன்போலவே பாங்கி தலைமகளை உடனழைத்துக் கொண்டு வந்து அப்பொழிலின் மருங்கே நிறுத்திவிட்டுத் தான் அப்பாற் சென்றாள். உடனே அவன் அயலொருவருங் காணாவண்ணம் முன்னும்பின்னும்பார்த்துக்கொண்டே ஆண்டுச் சென்று, அவளைக் கிட்டிக் கைபிடித் தணைத்துச் சென்று, மணிவண்டு யாழ்மிழற்ற இளந்



தென்றல் விருந்து செய்ய,மேலே பைம்பட்டு விதானித்தாற்போன்று பச்சிலை துன்னியடர்ந்து, முத்துக்குஞ்சங்களைப்போல் பூந்துணர் மன்னித் தொடர்ந்து, சித்திரச் சுவரென நாற்புரமும் பூங்கொடிகள் பின்னிப் படர்ந்த பைந்தருப்பள்ளியில் பல்லவ சயனத்தமர்ந்து விண்ணவர் விழைபோகந் துய்த்து உடலொடுந் துறக்க முற்றானெனக் களித்தான். பிரியமனமிசையாது அவர்களிருவரும் அவ்வாறு போழுதுபோக்குணர்ச்சியின்றிக் காலந்தாழ்த்திருப்பத் தலைவியை அழைத்தேக வந்த பாங்கி அவளைவெளிக்காணாது அப்பொதும்பரை அணைந்தாள். அணைந்து அதன் புறத்தே நின்று குன்றிடைக் கூவி எதிரொலியை யெழுப்பி விளையாடுவாள்போலத் தலைவியின் பெயரை அவளிசைத்தாள். தன் பெயரைக் கேட்டலும் உள்ளிருந்த தலைமகள் தாமதியாது தாமதித்ததை உணர்ந்து வெள்கி, உடையணிகளைத் திருத்திக் கொண்டு மெல்ல வெளிப்போந்து பாங்கியின் தோளைத் தழுவிக் கொள்ள, அந்திக்காலம் அணுகக் கண்டு அவர்களிருவரும் விரைந்து சென்று, தமது தினைப்புனத்தைச் சேர்ந்து அங்கே தங்கினார்கள். அவர்கள் போன பின் தலைமகனும் வெளிப்பட்டுப் பார்த்தவிடமெங்கும் தலைவியினுருத் தோன்ற மெல்ல உலவிச் சென்று தன் மாளிகை உற்றான்.

இவ்வாறே இவர்கள் சிலநாள் ஒழுகா நிற்ப, பாங்கி இக்களவொழுக்கம் இவ்வாறு நீடித்தால் நெருங்கிப் பழகுந் தோழியர்க்கும் பிறர்க்கும் புலனாகி விடுமென்றும், விட்டால் யாவருந் தன்னையே கடிந்துகூறி நிந்திப்பார்களென்றும் அஞ்சி, இனி இதனை எவ்வாறேனும் தடுத்துத் தலைமகன் தலைவியை மணம்புரிந்து கொள்ளுமாறு செய்யவேண்டுமென்று தேர்ந்தாள். இவள் இவ்வெண்ணங்கொண்டு, அன்று பிற்பகலில் வழக்கம்போல் தலைவியோடு குறியிடஞ் சென்று தலைவியை அதன் பாங்கர் நிறுத்தித் தலைவனைக் கண்டு அவனுக்குத் தன் உள்ளக்கருத்தை உணர்த்தித் தெருட்டக்கருதித் தான் முன்சென்றாள். ஆனால் வழக்கம்போல் அவன் அங்குவந்திருக்கக் காணாது நெடுநேரம் அவன் வரவை எதிர்பார்த்து நின்று, பிறகு தனித்து நின்ற தலைமகளிடம் மீண்டாள். அவளோ சில நாளாகத் தான் இடையீடின்றித் தலைவனைக்கூடி இன்புற்றதை நினைந்தும், அன்று அவன் அதுகாறும் வாராமையைக் குறித்தும் வருந்திய வருத்தம் அந்திப்பொழுதின் வரவால் அதிகரிக்க, அதை அடக்கவும் ஆற்றவுமாட்டாளாகி

கூற்றம் கரந்து, கொடிய புன்மாலை வடிவுகொண்டு
தோற்றும்; சிறுபிறையே எயிறாக. துறையிருந்து
தேற்றந்தரும் பெடையன்னமுஞ் சேவலும் சேக்கை [புகும்.
மாற்றுந் திறமறியேன். அவரோசென் றகன்றனரே.

என்று தனக்குள்ளே நினைந்து நைவதையும்,

கூவிக் குயிலை அழைக்கவும், காவி குறைவில்நிறை
ஆவிப் புனலும் அருவியும் ஆடவும், ஆயவெள்ளம்
ஏவித்தனிநின்று நெஞ்சமும் நானும் இரங்கஇன்னும்,
காவிற்சிறை வண்டுகாள், அவரேவரக் காண்கிலமே.

என வாய்விட்டிரங்கி ஏங்குவதையுங்கண்டு, அவளை மெல்லத் தழுவி முகத்தைத் தைவந்து தேற்றுவாளாய், "பாற்கடல் பயவாப் பங்கயத் திருவே! உன்னைப் பலகால் இங்கே புல்லித் தலையளிசெய்து அஞ்சலென்று அருளிச்சென்றவர் நின்னைப் பிரிந்துறைவார் அல்லர். சந்திராதித்தர் போய்ப்போய் மீளும் இத்தொல்லுலகில் பிறந்தோர்க்கெல்லாம் பிரிவென்பது சகஜமன்றோ? அன்றியும் தத்தமகிழ்நர் பாகத்தும், மார்பத்தும், நாவகத்தும் குடிகொண்டு வாழும் மலைமகளும், அலைமகளும், கலைமகளுமன்றி வேறு எவர்தாம் தந்துணைவரை ஒரு போதும் விட்டுப் பிரியாதிருக்கப் பெற்றார்? ஆதலால் உன்மேனியெல்லாம் பசப்பூர நீ அவர் பிரிவையுன்னி இவ்வாறு உள்ளம் மாழ்குதல் புலமைத்தாமோ? அவர் வாராமல் இரார்" என்று அவளைத் தேற்றிக் கொண்டிருக்கும்போதே, அவனுடைய தேரோசையைத் தூரத்தே கேட்டு, "உதுக்காண், அவர் கொடிநெடுந் தேரின் மணியொலி. அவர் இன்று காலந்தாழ்ந்து வந்ததற்கு ஒருசிறு தண்டனையாகவும், இங்குவந்து நம்மைக் காணாது அவர் அலமருந் துன்பத்தையுங் காதலையுங் காணவும், ஆங்குள்ள அசோகமர நிழலிலே நாம் சற்று மறைந்திருப்போம், வா" என்று அவளை உடன்கொண்டு சென்று அங்கே இருவரும் ஒளிந்திருந்தார்கள்.

அப்பொழுது தலைவன் தேரினைத் தூரத்தே நிறுத்திவிட்டு நடந்துவந்து அங்கே தலைவியைக் காணாது, அங்குமிங்குந் தேடிப்பார்த்து, ஒருகால் அவர்கள் முன்னரே வந்து தனக்காக நெடுநேரங் காத்திருந்து பின் திரும்பிப் போயிருக்கலாமென்று எண்ணி வருந்தி மீளலுற்றான். அப்பொழுது தலைவி அவன் குறியிடத்துப் புகக்கண்டு, மெல்லச்சென்று பின்னின்று அவன் கண்களை இருகையாலும் பொத்த, அவன் அப்படியே அவ்விருகரத்தையும் இறுகப் பிடித்துக்கொண்டு,

மின்கண் புதைக்கு மருங்குல் நொந்தேவிம்ம
விம்முகொங்கை
தன்கண் புதைக்கத்தகும் புறஞ்சார்ந்துமென்
சாயலொளித்
தென்கண் புதைத்தகை இம்மலர்க்காவில்
எதிர்ப்பட்டநாள்
நின்கண் புதைத்தகையோ அறியேன்கொல்
நிரைவளையே.

என்று பாராட்டி ஒருகையை விடுத்து ஒருபக்கமாய்த் திரும்பி முகத்தோடு முகமணைத்து நின்றுழிப் பாங்கி அங்குவரக்கண்டு தலைவி அவன் கைப்பிடியையகற்றிச் சற்றப்பால் ஒதுங்கித் தலைசாய்த்து நின்றாள். அப்பொழுது தன்னெதிரே வந்த தலைமகனை நோக்கிப் பாங்கி, "நட்டார் நலிவகற்றும் நாமவேல் அண்ணல்! கரந்த காமம் இவளது பருவமுதிர்ச்சியாலுங் கதிர்ப்பு வேறுபாட்டாலும் புறத்தார்க்குப் புலனாய் வெளிப்படாநின்றது. நீர் இனி இவ்வாறொழுகாது இவளை வரைந்து கொள்வீராக" என்று தெருட்டினாள். தெருட்டவும் அவன் அதற்குடன்படாது, "விண்ணாட்டு அரம்பையருள்ளும் இவளுக்கு ஒப்பில்லையென்ன நான்முகன் படைத்த நங்கை இவளை நான் வரைந்துகொள்ளுதற்குரிய அத்துணை எளியளொரு கொடிச்சியென்று நீ கூறுகின்றது என்னோ?" என்று தலைவியை மேம்படுத்திப் புகழ்ந்தான். அதற்கவள் "தழைகாட்டி மானைப் பிடிக்கவந்த மாவேட்டைக்காரர் நீர். எங்கள் தாய்தந்தையர் கானவர். யாம் புனங்காக்கும் புன் தொழிலேம். நீர் வரைவு வேண்டாவிடின், எம்மை வாளா பொய் புனைந்துரைத்து இகழ வேண்டா" எனச்சொல்லி அவரைப் போகவிடுத்துத் தலைவியை அழைத்துக் கொண்டு புனஞ்சென்றடைந்தாள்.

மறுநாள் வழக்கம்போல் தலைவியொடு குறியிடஞ் சென்ற பாங்கி அன்றுந் தலைவனை முன்னி, "ஏற்றிழிவு பாராது தேக்கெறிந்து கல்லுருட்டிக் கானயாறு விரைந்தோடும் வியன்மலைச் சிலம்பா! நேற்று நான் சொன்னதொன்றையும் நீர் திருவுளம் பற்றவில்லை. இவள் நற்றாய் இவளது பருவமுதிர்ச்சியும், அதனால் மேலங்க வளர்ச்சியும், அதனால் சிற்றிடைத் தளர்ச்சியுங் கண்டு, இவளுக்குப் பற்றுக்கோடாவான் யாவனெனக்

கவலையுற்று அழிகின்றாள். இனிமகட்பேசி வருவார்க்கு மறுதிவலைக் கொடுக்கவுங் கூடும்; வெளியே சென்று விளையாட வேண்டாமென்று தடுக்கவுங் கூடும். அயலார் இதையறிந்து மணம்பேச வருவதற்கு முந்தி நீர் வரைவொடுவரின் உம்மை இவள் பெற்றோரும் உற்றோரும் மற்றோரும் எதிர்கொண்டு வரவேற்பர்'' எனக் கூறி, வரைந்து கொள்ளுமாறு அவனை முடுக்கித் தான் அப்பாலேகினாள். ஏகவும் அவன் தலைவியுடன் பொதும்பருட்புகுந்து பூம்பள்ளியில் இனிதமர்ந்தாடி மலர் குடைந்து மதுவுண்ட மணிவண்டெனக் களித்துப் பின்பு அவளைப் பாங்கியுடன் கூட்டி விடுத்துத் தன் மனைக்கு மீண்டான். மீண்டு பாங்கி சொல்லியவற்றையெல்லாந் தானே நெடிது சிந்தித்துந் தன்னைக் காணவந்த பாங்கனுடனுசாவி ஆலோசித்தும், காலம் நீட்டியாது அவள் சொல்லியவண்ணம் செய்வதே நலமெனத் தெளிந்தும், எவ்வகை, எவரைக்கொண்டு அதை முடிப்பதெனத் தேறானாய்ப் பின்னுமெண்ணிச் செயற்பாலதைச் செய்வலெனத் துணிந்தான்.

அற்றைப்பொழுது அவ்வாறு கழிய மறுநாட்பகலில் அவன் முன்போற் குறியிடஞ் சென்றான். அங்கே நெடுநேரம் காத்திருந்தும் தலைவியாவது பாங்கியாவது வாராமையால், அதன் காரணத்தை அறியவிரும்பித் தினைப்புனம் நோக்கிச் சென்றான். சென்று, இருவரும் ஒருபக்கத்தே பேசிநிற்கக்கண்டு அவன் அவரெதிர்சென்று நிற்கக்கூசி மறைந்து நின்றான். அவன் வந்ததையும் மறைந்திருப்பதையுமுணர்ந்த பாங்கி தலைவியுடன் ஏகாந்தமாய்ப் பேசுவாள் போலவும் வருந்தினாள் போலவும் தலைவன் செவியிற் படும்படி இவ்வாறு இயம்பலுற்றாள்:—

“அதெல்லாங் கிடக்க, கண்ணுக்கினிய கருங்குவளையை நச்சிக்குண்டுசுனைபுக்கு அதைப்பறிக்கவிசையாமலும்விடவிசையாமலும் கரையேறாது வருந்தும் மடமாதே! அயலார் நாளை உன்னைப் பொன் புனைந்துகாண வருகின்றார். அது எவ்வாறு முடியுமோ? நான் அறியேன். அன்றியும் வேங்கை மரமெல்லாம் தழலெனப்பூத்து முதிர்ந்த தினையைக் கொய்யும் பருவம் இதுவெனக் காட்டிட, உனது ஐயன்மார் இன்று நாளைவந்து கதிர்களைக்கொய்திடுவார். அன்றோடு புனக்காவலும் நமக்குத் தீர்ந்துவிடும்; நாமும் நம்மனை சென்று விடுவோம். அதன்பின் நீ அவரைக் காணவும் பெறாய். அவர் வரைந்து கொள்ளாமையைக் குறித்து நீயோ வருந்துகின்றாய்; அவரோ வரைவென்று நான் சொல்லக்கேட்டே வருந்துகின்றார். உம்மிருவர் உள்ளமும் இவ்வாறு மாறுபட்டு நிற்றலின் உமக்கிடையே பற்றாசென நின்று உம்மைப் பொருத்திவைத்த நான் என் செயலை நினைந்து வருந்தாநின்றேன்'' என்று சொல்லிக்கொண் டிருக்கையில் தலைவன் அவரை எதிர்ப்பட்டு நின்றான். அவனைக்கண்டதும் பாங்கி, “ஐய, இவ்வாறு எம்மைநாடி இங்குநீர் வாரற்க. முன்போலன்றி, இளங்கன்று யாத்துழிச் செல்லும் புனிற்றாப் போல இவளைக்காண இவள்தாய் அடிக்கடி இங்குவருகின்றாள். தினைசெவந்து கொய்யுங்காலம் அணுகியதால் இவள் தமையன்மாரும் அடிக்கடி புனத்தைப்பார்க்க வருகின்றார். இனியாம் முதிர் தினைக் காவலை நெகிழவிட்டு வெளிச்செல்லவும் ஒண்ணாது. அவர் யாரேனும் உம்மை இங்குவரக் கண்டால் ஏதம் பல விளையும். இரண்டொரு நாளில் யாம் இப்புனக்காவலொழிந்து எம்மூருக்கு ஏகிவிடுவோம். இவள் மற்றெதை மறப்பினும் உந்நினைவை ஒருபோதும் விடாள். உம்மையன்றி இவளுக்குப் பற்றுக்கோடு வேறொன்றுமில்லை. நீர் இவளை மறந்தொழியாது உம்முள்ளத்தினொருமூலையில் இடந்தந்து வைத்தருளும்,'' என்று இரக்கமொழியால் இரந்து வேண்டினாள். அதைக்கேட்டுத் தலைவன் அருந்துயருழந்து, “நெஞ்சே! இனி நமக்குத் தஞ்சம்யாதுளது. செப்பகத்தே செறித்தால் நாரிற்பிணித்த நறுமலர்க்கோதையின் மணத்தை நாம் பெறுவது எங்ஙனம்!'' என்று புலந்து பின்பு தோழியை நோக்கி,

> சுறவேய் குழையும் மழைபொரு கூந்தலும்
> சூழ்வளைத்தோள்
> நிறவே யழகும் செறியும் புருவமும் நேரிடையும்
> அறவே வளர்தன பாரமும் ஆம்ப லிதழுஞ்செம்மை
> மறவேல் விழியிணையும் மறவேனொரு வைகலுமே

என்று பரிந்து ஆற்றாநெஞ்சினனாய் அவ்விடம் விட்டகன்றான்.

மறுநாள் ஆரம்பித்து இரண்டுமூன்று நாளில் குன்றக்குறவர் தினையை முழுதுங் கொய்துகொண்டேக, தலைவி புனக்காவலை நீத்து மனைக்கு ஏகலுற்றவள், அதுகாறுந் தினந்தினம் தாம் சென்று விளையாடிப் பயின்ற பல இடங்களையும் கடைசியாக ஒருதரம் பார்க்க விரும்பிப் பாங்கியுடன் சென்றாள். சென்று அவற்றைக்கண்டு “இத்தேமாம் பொழிலும், மாதவிப்பந்தரும், குவளைச் சுனையும், நாகமலர்ப்பள்ளியும், வேயமலடுக்கமும், இருவிப்புனமும், வேங்கைமேலிதணும் இன்று நம்மை என்ன நினைக்கின்றனவோ? பலகால் மருவிப்பழகிப் பின்பாராது கைவிட்டுப்பிரியும் வன் கண்ணரைப்போல் கன்னெஞ்சரில்லை இவ்வுலகத்து'' என்றும்,

> கொய்கின்ற ஏனலும், கொய்யா நறுங்குவளைச்
> சுனையும்,
> செய்குன்றும், ஊசலும், சிற்றிலும் பார்த்துத்
> திகைத்தயிர்த்து
> நைகின்ற ஆவியுந்தாமும் என்னாவர்கொல் நண்பர்?
> கொண்டல்
> பெய்கின்ற சாரலும் சீறூரிதுவெனப்
> பெற்றிலமே.

என்று படர்கூர்ந்து அழுங்கலுற்றாள். அவள் படுந் துன்பத்துக்குப் பரிந்து, அவளைத் தேற்றி “பைங்கிளிகாள், எம்மிறைவர் இங்குவந்து எம்மைக் காணாது வருந்தி உம்மை நோக்கினால், யாம் தழல் கொண்டும்மை அச்சுறுத்தோட்டிய தீங்கைநினையாது அவர்க்கு எம்பிரிவையோதி எம்மூரையுங்காட்டி, எங்கண்ணீர் விழுந்த ஈரம் புலராத வழியே எம்மூர்க்குச் செல்லும் வழியென்றுங் கூறி எம்முழை வரவிடும்'' என்று சொல்லித் தலைவியை அவ்விடம் விடுத்துக் கொண்டு அகன்றாள்.

பாங்கி சொல்லியவற்றை நினைந்து இரண்டுமூன்று நாள் தலைமகளைக் குறித்து அங்குச் செல்லாத தலைமகன் மறுநாள் குறியிடமாகிய நாகமரப் பொதும்பரை யடைந்து தலைவியைக் காணாது,

> மான்காள், நிகரில் மடமயில்காள், தண்மலர்ப்
> பொழில்வாழ்
> தேன்காள், நிரைமென் சிறைக் கிள்ளைகாள், என்
> தெருமரனோய்
> தான்காணிய கொலிச் சந்தனச் சோலையைத்
> தன்னையின்றி
> யான்காணியகொல் எழுந்தருளாத தின்றென்
> னுயிரே.

என்று நீடுநின்றிரங்கிப் பின் புனத்திடைச் சென்று வெறும்புனமும் பாழிதணும் பொலிவழிந்து புல்லென நிற்கக் கண்டு மனமறுகி, அவர் சிற்றூர் அணித்தாயினும் காப்பு மிகுதியால் அவர்களைக் காண்பதரிதென்று கலங்கித் தன்பதி மீண்டான்.

பாங்கி அறிந்து துணையாய் நின்று கூட்டுவிக்கத் தலைவனுந் தலைவியும் விலங்கன்றி மக்கள் மிகப்பயிலா வரைக்கானகத்தே குறிப்பிட்டதோரிடத்தே பலகாலும் பகலில் பிறரெவருங்காணாது மருவிக்கூடிய கூட்டம் ‘பகற்குறி’ எனப்படும். கதிரீன்ற தினைப்புனக்காவற்றொழிலில் அமர்த்தப்பட்ட தலைவி தன்னுயிர்ப்பாங்கியுடன் தனித்து அப்புனத்திடையே தங்கும்படி நேர்ந்ததே இதற்கு மிகவும் சாதகமாயிருந்தது. அது தீர்ந்து அவள்வீட்டுக்குத் திரும்பிப் பருவமுதிர்ச்சியால் ஏதேச்சியாய் முன்போல வெளிப்போகாதபடி வீட்டகத்தே செறிக்கப்படவே இப்பகற்கூட்டம் முடிவு பெற்றது.

இது ஒரு நாளிற்போலவே பலநாள் நிகழ்ந்த நிகழ்ச்சி.

K. இராமரத்நம் ஐயர்.



# மதிப்புரை.

## பாகவதசாரம்.

[ஆசிரியர்.Sir. T. சதாசிவ ஐயர் kt. கிடைக்குமிடம் R. சுவாமிநாத ஐயர், மணி ஐயர் ஹால், திருவல்லிக்கேணி, சென்னை. விலை 12 அணா]

பெருமையும்வாய்மையும் ஒருபோதும் வழுவாதுசென்னையில் பலகாலம் நீதிபதியாய் விளங்கிச் சிலநாட்களுக்கு முன் மேலுலகடைந்த பெரியர் சதாசிவ ஐயர், பகவத் பக்தியிலும் நுண்ணிய சாஸ்திரங்களிலும் ஆழ்ந்த வாழ்க்கையினராய்த் திகழ்ந்தனரென்பது அறியாதார் யார்? அன்னார் எழுதியதேனும் அவருக்குப் பிற்காலத்தில் வெளிவந்த பாகவதசாரம் என்னும் இந்நூலைப் பார்க்கவும் படிக்கவும் அவர் இறந்த குறையால் விளைந்த வருத்தம் பின்னும் எமக்கு அதிகமாகின்றது. இதனைப் பதிப்பித்த ஸ்ரீமான். க. வி. கனகசபை பிள்ளையின் பேருதவியைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இந்நூல், கற்றவர் கல்லாதார் இருவகையோர்க்கும் அளவற்ற பயன் விளைவிக்கக்கூடியதாய் எழுதப்பட்டுளது. நாம் இது கூறுவது, எளிமையும் இனிமையும் வாய்ந்த அவர் தமிழின் நடையை மாத்திரம் குறித்தன்று. பாகவதம் என்று ஒன்று இருப்பதுதவிர அதைப்பற்றி ஒன்றுமே தெரிந்தில்லாதவர்களும் இப்புத்தகத்தைச் சிறிது கருத்தூன்றி படிப்பாராயின் முன்னிலும் நல்லராய் எழுவர் என்பதற் கையமில்லை. ஐயரவர்கள் அத்தியாயம் அத்தியாயமாய் எடுத்துக்கொண்டு அதனில் தான் மெய்யென மதிக்கும் சுலோகங்களின் பொருளைப் பொழிப்பாககூறிப் பிறகு அவைகளின் தத்துவங்களை விளக்கிக் கொண்டுபோகிறார். இதனால் சாதாரண ஜனங்களுக்குப் பாகவதத்தின் ஸாரம் வெகுஎளிதில் புலப்படுவது மாத்திரமல்லாது தமது ஆன்மா உய்ந்து கரையேறுவதற்கு அது காட்டும் நெறியையும் ஒருசிறிதேனும் பின்பற்ற முயல்வர் என்பது திண்ணம். அதுவன்றித் திருமாலின் அவதாரங்களின் தத்துவப்பொருள் போன்ற பல அரிய விஷயங்களையும் விளக்கி வைத்திருக்கின்றனர். மொத்தத்தில் இப்புத்தகத்தைப் படிப்பவர் எவரும் தம் வாழ்க்கை வேறுவிதமா யமைதல் வேண்டும் எனும் உயரிய நோக்கத்தை அடைவர்.

பாமரர்க்கு இக்காரியம் செய்வது ஒருபுற மிருக்கப் பண்டிதர்களைத் திருத்தி வைத்திருக்கின்ற தன்மையில் இப்பெரியநூல் புரிகின்ற செயல் பின்னும் முக்கியமானது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் உண்மையென்று ஏற்றுக்கொள்ளத் தகுந்த சுலோகங்கள் எவையென்றும் பிறரால் பிறகாலங்களில் சேர்க்கப்பட்ட பொய்ச் சுலோகங்கள் எவையென்றும் காரணத்துடன் இவர் வகுத்துக் காட்டுவதால் ஏற்படும் நன்மை எவ்வளவென்பதைக் கற்றறிந்தவர் நன்கு மதிப்பார். மதாசார குலாசாரங்களைப் பற்றிச் சதாசிவ ஐயர் விரிந்த நோக்குடையவர். சாஸ்திரம் விரோதமாயிருக்கின்றதே என்ற எண்ணத்தால் தம் மனத்திற்கு நியாய மென்று தோன்றுவனவற்றையும் கையாள முடியாமல் தவிப்பவர்க்கு இந்நுண்ணறிவும் ஆராய்ச்சியும் வாய்ந்த பெரியார், “சமிஸ்கிருத சுலோகங்களெல்லாம் சாஸ்திரங்களல்ல'' வென்று தர்க்கமுறை தவறாது சாதித்திருப்பது, இருபாற்பட்ட தம்முள்ளத்தை ஒருநிலைக்குக் கொண்டுவருகின்ற அரியதோர் உதவியைச் செய்துவைக்கும். அல்லாது, நூலறிவு ஓரளவு பெற்ற பண்டிதர் சிலர் தாம் கற்றதெல்லாம் வீண்வாதத்தின் பொருட்டே செலவுசெய்து அகங்காரத்தோடலைகின்றதை இந்நூல் பற்பலவிடங்களில் தக்கபடி கடிகின்றதும், அத்தகையவர் இரண்டொருவரை நல்வழிப்படுத்தவும் இயலும் என்று நம்புகின்றோம். அவர்களைக் குறித்து ஐயரவர்கள் சொல்கின்ற வார்த்தை சில, இங்குக் காட்டுவோம் :—

> “ இந்த ஸ்தூல பிரபஞ்சத்திற்குள்ளே யிருந்து பகவானுடைய தேஜஸ் பிரகாசிக்கின்றது என்கிற முதல் பாடத்தைக்கூடச் சரியாய்க் கற்றுக் கொள்ளுமுன், சில அவசரப்பட்ட ஜனங்கள் தங்களுக்கு மூலகாரண வஸ்துவை ஒரே தாண்டலாய்த் தாண்டிக் கண்டுபிடிக்க யோக்கியதை ஏன் இருக்கக்கூடாதென்று அசுர சுபாவத்தால் “எனக்குச் சமானம் யார்'' (கோந்யோஸ்தி ஸத்ரு சோமயா—கீதை 16 அதத்தியாயம்) என்று ஜீவன் முக்தகுருக்களை அணுகாமல், சாஸ்திர சப்தங்களையும் சுஷ்கதர்க்க வாதங்களையுங் கைக்கொண்டு மயங்குகிறார்கள்''.

இப்படி மயங்குகின்ற மனத்தவர்தாம் “ கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்'' என்று தயுமானவரைக் கதறும்படி செய்கின்ற பண்டிதர்கள். இதனைத் தொடர்ந்த ஐயரவர்கள் விளக்கி வைக்கின்ற மார்க்கம் யாவருக்கும் மெய்த் தீபமாக ஒளிர்கின்ற தாகையால் அந்தப் பாகத்தையும் எடுத்து வரைவோம்:—

> “ நாம் காணும் பிரபஞ்சத்தின் அளவற்ற பதார்த்தங்களெல்லாம் மூலப்பிரகிருதியின் காரியங்களென்றும் அவை மூலப்பிரகிருதியாகிய காரண வஸ்துவோடு ஒன்றென்றும் அந்த அத்துவைதத்தை ஸேசுவர ஸாங்கிய சாஸ்திரப் பயிற்சியால் முதலில் அறிந்துகொண்டு, பிறகு சர்வ கருமங்களும் பகவானுடைய சக்திகள் செய்கின்றன, என்றறிந்து அகங்காரத்தால்நான் செய்கிறேன் என்று மயங்காது எல்லாக் கருமங்களையும் அவைகளின் பலன்களையும் ஈசுவரனுக்கு அவருடைய இஷ்டப்படியும் அவருடைய (Plan) ஏற்பாட்டுப் படிக்கும் உபயோகப் படுத்தும்படி அர்ப்பணம் செய்வதாகிய இரண்டாவது அத்துவைதப் படியையும் அனுசரிக்க வேண்டும். நம்முடைய சுகதுக்கங்களையும் மற்றப் பிராணிகளின் சுக துக்கங்களையும் வித்தியாசமில்லாமல் அனுபவிப்பதாகிய மூன்றாவது அத்துவைதமும், மனது வாக்கு (வாக்கு என்றால் எல்லா இந்திரியங்கள்) காயம் இவைகளால் அப்பியாசம் செய்யவேண்டும். இம்மூன்று அத் துவைதங்கள் சித்தித்தால் பகவத்பாவம், அல்லது பகவத் பிரவேசமாகிய அத்துவைத முண்டாகும்.''

இவ்வப்பியாசங்கள் லோகாயதப் பிரதானமான இக்காலத்தில் எளியன வன்றெனினும் தெளிவாய் அவைகளைச்சொல்லிவைப்போர்க்கு உலகம் கடமைப்பட்டுளது.

பற்பலவிடங்களில் சதாசிவஐயரவர்கள் தனது கொள்கையை அச்சமின்றிக் கூறுகின்றார். மிகவும் வணக்கத்தோடு அவர் ஸ்ரீதரசுவாமிகளது உரையின் கருத்தோடு மாறுபடுகின்ற நலம் பாராட்டத்தக்கது. அவ்வாசாரியருக்கும் “ க்லிஷ்ட கற்பனைகள் செய்யுந் தவறு கொஞ்சமாய் உண்டு'' என்று இவர் துணிந்து சொல்வதைக் கற்றறிந்தவர் ஆராய்ந்து ‘இது பொருந்துமோ பொருந்தாதோவென’ உடன்பட்டும் மறுத்தும் எழுத வெளிவருவாரென்று எண்ணுகின்றோம். அவ்வாறே, ஸ்ரீகிருஷ்ணபகவானது தேகம் தாய்வயிற்றில் கருமுதிர்ந்து பிறந்த மனுஷ்யதேகமே என்றும்,இதற்கு மாறாகக் காண்கின்ற சுலோகங்கள் இடைப்புகுந்தனவென்றும் ஐயரவர்கள் சொல்வது, ஸ்ரீ U. P. கிருஷ்ணமாசாரியார் போன்ற அறிஞர்களுக்குச் சம்மதமா யிருக்காது. எனினும் பொய்யுரை அறியாப் பெரியோரிவர், “நான் அறிந்துணர்ந்ததைவிட நன்றாக அனேக இடங்களில் உள்ளுணர்ச்சியாலான உன்னத அறிவின் சக்தியால் எழுதியுள்ளேன் என அறிகிறேன்'' என்று இப்புத்தகம் அச்சில் இருந்தபோது ‘புரூப்’ பார்த்தகாலத்தில் தனது நண்பரும் இதைப் பதிப்பித்தவருமாகிய ராவ் சாஹிப் S. V. கனகசபை பிள்ளை அவர்களுக்கு எழுதிய மொழிகளால் இவர் வகுத்த கொள்கைகளே மெய்ப்பொரு ளுடையனவா யிருக்குமென்னும் மதிப்போடு ஆராய்ச்சியுள் தலைப்படுவதே தகும்.

## வர்த்தமானம்.

**மந்திரிகள் நியமனம்:**— ஸ்ரீமான்களான அரங்கநாத முதலியார், ஆரோக்கிஸாமி முதலியார் இருவரும் தங்கள் பதவியை விடுத்ததால் ஏற்பட்ட காலி ஸ்தானங்களுக்கு ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியாரும், ஸ்ரீமான் சேதுராம ஐயரும் நியமிக்கப் பட்டனர். ஸ்ரீமான் முதலியார் காங்கிரஸின் சார்பாகத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர். ஐயரோ சுயேச்சைக் கட்சியினராயிருந்து தேர்தலில் வெற்றியடைந்து பிறகு காங்கிரஸில் சேர்ந்தவர். சில தினங்களுக்குமுன், ராஜிநாமா செய்த மந்திரிகள் செயலையும் ஐயர் ஆதரித்துள்ளார் என்று சுயராஜ்யக்கட்சியினர் ஏளனம் செய்கின்றனர்.

***

**கன்னி மில்லர் இந்து வானர்:**—சென்ற வாரம் வடநாட்டிலுள்ள காவீர் பீடத்து சங்கராச்சாரியார் நாஸிக் என்னு மிடத்தில் கோதாவரி நதிக் கரையில் கன்னிமில்லரை வேத முறைப்படிப் பிராயச்சித்தம் செய்து இந்துவாக்கினர். அவள் பெயரும் ஸர்மிஷ்டி தேவி என்று புனையப்பட்டது. சங்கராச்சாரியார், இதுவரை அடைத்திருந்த சனாதனக்கதவு விரும்பிவரும் அடியார்களுக்கு இன்றே திறக்கப்பட்ட தென்றும், இனி இந்து மதம் உலகெங்கும் பரவுமென்றும் கூறினர். பல வைதிகரும் இதை ஏற்றனர் என்று தெரிகிறது.

***

**டில்லிச் சட்டசபையில் சைமன் கமிஷன்:**— டில்லிச்சட்டசபையில் இந்திய அரசியல் உரிமை விஷயமாக விசாரணை செய்ய நியமனம் செய்யப்பட்ட சைமன் கமிஷனின் செலவிற்கென்று 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று அரசாங்க அங்கத்தினரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் பண்டிதர் மோத்திலால் நேரு, ஸ்ரீ மதன் மோகன மாளவ்யா, ஜனப் ஜின்னு முதலிய பலரால் எதிர்க்கப்பட, அதிகமானவர்களால் மேற்படி தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. தீர்மானத்துக்குச் சாதகமாய் 59 பேரும், விரோதமாய் 66 பேரும் வாக்குக் கொடுத்தனர். ஆனல், கவர்னர் ஜனரல் அந்தச் செலவு செய்துதான் தீரவேண்டு மென்று ஆக்ஞாபித்து விட்டனர்.

***

**இந்திய இராணுவச் செலவு:**—இந்திய இராணுவச் செலவு விஷயமாய் டில்லிச் சட்டசபையில் வாதம் நடக்கையில் டாக்டர் மூஞ்சி கூறியதாவது:—"இந்திய ராணுவத்தில் உள்ள இந்தியக் குதிரைப்படை வீரர், பிரிட்டிஷ் வீரர்களைப் போன்ற திறைமை யுடையவர்கள் என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியே ஏற்றுக் கொண்டுள்ளார். அப்படியிருந்தும் குதிரைப் படையிலுள்ள 15,000 இந்தியருக் கென்று 8 லட்சம் ரூபாயும், 4000 தொகையுள்ள பிரிட்டிஷாருக்காக 15 லட்சம் ரூபாயும் செலவிடப் படுகின்றன. காலாட் படையிலும், 90,000 தொகையுள்ள இந்தியருக்கு 6 லட்சமும், 45,000 தொகையுள்ள பிரிட்டிஷாருக்கு 16 லட்சமும் செலவிடப் படுகின்றன. நிற்க, இங்கிலாந்து தனது மொத்த வருமானத்தில் 100-க்கு 14 வீதந்தான் இராணுவத்திற்கெனச் செலவிடுகிறது. பிரான்ஸிலும், இத்தாலியிலும் 100-க்கு 10 வீதமும், ஜெர்மனியில் 5 வீதமும், ஜப்பானில் 10½ வீதமும் தான் செலவிடப் படுகின்றன. இந்தியாவிலோ 100-க்கு 42 வீதம் செலவாகிறது. இது ஏனே தெரியவில்லை."

***

**சட்டசபையில் மந்திரிகள் சம்பளம்:**—மார்ச்சுமாதம் 20-ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்குச் சென்னைச் சட்டசபை கூடிற்று. அதிகமான ஜனங்கள் நடவடிக்கையைக் கவனிக்க வந்து கூடியிருந்தனர். மாற்றப்பட்ட இலாக்காவில் மந்திரிகள் சம்பளம் முதலிய செலவிற்காக 4 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி வைக்கவேண்டும் என்று முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் கேட்டுக்கொண்டார். மந்திரிகளின் சம்பளத்திற்கென்று ஒதுக்கப்பட்ட 174000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டுமென்று ஸ்ரீமான் கோயம்புத்தூர் வெங்கடரமணஐயங்கார் பிரேரேபித்தார். மந்திரிகளிடம் சட்டசபைக்கு நம்பிக்கையில்லை யென்பதைத் தெரிவிக்கவே இம்முயற்சி. காங்கிரஸ் கக்ஷியினர் அனைவோரும் மந்திரிகள் செயலைக் கண்டித்தனர். கடைசியில் ஓட்டுக்கு விட்டதில் 46 பேர் சாதகமாகவும், உத்தியோக அங்கத்தினர்கள் உள்பட 69 பேர் பாதகமாகவும் ஓட்டுக்கொடுக்க ஸ்ரீமான் வெங்கட்டரமண ஐயங்கார் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது. ஜஸ்டிஸ் கட்சியில் பனகால் ராஜா, ஸர் பாத்ரோ இருவரும் எப்பக்கமும் சேரா திருந்தனர். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் தீர்மானத்திற்கு விரோதமாக ஓட்டுச் செய்தனர். ஜஸ்டிஸ் கட்சியினரில் அரசாங்கத்தின் பக்கமாய் வாக்குக் கொடுத்த 21 பேரும் நடுநிலைமை வகித்திருப்பின் சுயராஜ்யக் கட்சியினர் வெற்றி யடைந்திருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

***

**மாயையும் கடவுளும்:**—சென்றவாரத்தில் கூடிய மதுரை அறிஞர் சங்கத்தில் மாயையும் கடவுளும் என்னும் விஷயமாய் ஸ்ரீமான் எம். கிருஷ்ணமூர்த்தி ஐயர் பேசினர். அப்போது அவர் கூறியதாவது :—"மாயை என்னும் சொல்லுக்கு இல்லாதது வேண்டாதது என்பது பொருள். மாயையாகிய அவித்தை பரமாத்மாவுடன்சேர்ந்து ஜகத்தை உண்டாக்குகிறது. மாயைக்கு அவித்தை, அஞ்ஞானம், பிரகிருதி என்ற பலபெயர்கள் உண்டு. முத்திபெற்ற ஆன்மாக்களும், பிர்ம்மப் பிரளயத்திற்குப் பிறகு புதிய சிருஷ்டியில் மீண்டும் பிறப்பை எடுக்கிறது என்பதே சங்கரர் கொள்கை"

ஸ்ரீமான்களான வீச்வநாத ஐயர், ராமஸ்வாமி நாயிடு, ராமாச்சாரியார் முதலிய பல அறிஞர்கள் தங்களது கருத்தை வெளியிட்டனர். பின்னர் அவைத் தலைமை வகித்த அறிஞர் எஸ். சோமசுந்தர பாரதியார் M. A. B. L கூறியதாவது :—

"மாயை கடவுள் என்னும் விஷயத்தைப்போதியவாறு உபந்நியாசகர் விளக்கவில்லை. அங்ஙனம் விளக்குதலும் முடியாத காரியம். இவ்விஷயங்கள் வாய் வியவகாரத்தாலறியும் அவ்வளவு சிறியதல்ல. அன்றியும் இல்லாதது ஒருபொருள் ஆதல்முடியாது. எங்கும் எவ்விதத்திலும் இல்லாத வொன்றை இருப்பதாகக் கருதமுடியாது. கேவலம் இன்மையே மாயை என்றால், அது தொழிலால் உலகத் தோற்றத்திற்கும், ஜீவான்மாவின் வினைக்கும் ஆதாரமாதல் முடியுமோ, கருதுவீர். நிலையான ஒரு பொருள் பரமாத்மா வென்றும் அது அல்லாததே மாயை என்றும் சங்கரமதம் சொல்லிவைக்கிறது. மாயை கடவுளின் சக்தியே என்று கூறுவர் ஒரு சாரார்; அக்கூற்று ஏற்கத் தக்கதாயில்லை. பிரமத்தின் இயல்பையும், தொடர்பையும் அறிவதற்கு இடையூறாய் இருந்து ஆன்மாவை மயக்கி, பிர்ம்மநிலையை நாம் அடையவொட்டாமல் தடுப்பது மாயை என்றால், பின் கடவுள் சக்தியே மாயை என்பது பொருந்துமென நான் கருத முடியவில்லை. சங்கரர் கொள்கையைச் சரியாய்ப்பலர் அறியவில்லை. சாதாரணச் சமயக்கொள்கைகளைச் சங்கரரது அரிய தத்துவத்துடன் குழப்பி வாய்தந்தனகூறுதல் சங்கரரையே அவமதிப்பதாகும். சங்கரர் வகுத்த அத்துவைதம். உலகை வியப்பிக்கக்கூடிய உண்மையாகும். அத்துவைதப் பிரசங்கிகள் மாயை, அவித்தை, சுஷுத்தி, துரியம் என்று வார்த்தைகளைக் கொட்டி, விஷயம் தமக்கும், பிறர்க்கும், விளங்கா வண்ணம் பிரசங்கம் செய்து திருப்தியும் அடைகின்றனர். இதனல் எவ்விதப் பயனும் நலனும் யாருக்கும் ஏற்படாது."




(6) ஸ்ரீமத் வால்மீகி

**இராமாயண வசனம்.**

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | | |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | 6 காண்டம் |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ. 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. | 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை





**லோகோபகாரி**

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினல் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் **4.** வெளிநாடுகளுக்கு ரூபாய் **6.**

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம். (7)



**யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்**

(2) **கம்பனி, லிமிடெட்.**

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ஹூ௵த்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம். 188995
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனல் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281, ஸ்டார் அண்டு கம்பனி
10, மக்லீன் தெரு, சென்னை. மானேஜர்கள்.

(1). **இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

**நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்**

**இந்திய லைப் ஆபீஸ்.**

**போர்டு ஆப் டைரக்டர்கள்.**

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T.
வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

**நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,**
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

## Dr. Orison Swett Marden's
## World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

**V. KALYANARAM IYER & Co.,**
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)